விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

# அமெரிக்க அதிகாரி மீது அரசாங்கம் கடும் அதிருப்தி

## கூட்டமைப்பின் சந்திப்பை அடுத்து!



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மைக்கல் ஏர்வின் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பில் அரசாங்கம் கவலை கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலர் உகண்டா பயணம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் உகண்டா நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை விரிவுபடுத்தும நோக்கில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உகண்டாவிற்கு பயணம் மேற்கொணடுள்ளார்.

நேற்றுமுன்தினம் உகண்டா சென்றடைந்த கோத்தபாயவை, அந்த (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்களை நிரந்தரமாக்க முயற்சி?

(கொழும்பு)


வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அப்புறப்படுத்துமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை நிராகரித்துள்ள அரசாங்கம், இராணுவ முகாம்களை நிரந்தர முகாம்களாக அந்த பகுதிகளில் வைத்திருக்க தீர்மானித்துள்ளது.

வடக்கில் இருக்கும் இராணுவ முகாம்களை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளி நாடுகள் ஊடாக இலங்கை அரசாங்கத் திறத கடும் அழுத்தங்களை கொடுத்து வருகிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர் (23ஆம் பக்கம் பார்க்க)

# விக்னேஸ்வரன் முதலமைச்சரானால் தனித்தமிழ் நாட்டை தடுக்க முடியாது!

## ஹெல உறுமய தெரிவிப்பு



(கொழும்பு)

வட மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் உயர் நீதி மன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டால், வடக்கில் தனித் தமிழ் நாடு உருவாவதை தடுக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்படியான அச்சுறுத்தல் மிகுந்த சூழலை எதிர்நோக்கியுள்ள நாட்டை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழர்களுக்கு தனி நாடு வழங்கப்படவேண்டும் என்பதை அனுமதிக்க முடியாது. வடக்கில் இருந்த சிங்கள மக்கள் விரட்டப்பட்டுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

# பரமேஸ்வராச் சந்தியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 500 ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில், முன்னர் தமிழீழ மாணவர் பேரவை அமைந்திருந்த இடத்திற்கு அருகாமையில் இவை மீட்கப்பட்டுள்ளன.



40 லீற்றர் கொள்கலன் ஒன்றிலும் 5 லீற்றர் கொள்கலன் ஒன்றிலும் நிரப்பட்ட நிலையிலேயே இத்துப்பாக்கி ரவைகள் குறித்த இடத்தில் புதைக்கப்பட்டிருந்தன.

சுமார் ஒன்றரையடி ஆழத்திற்கும் அதிகமாக புதைக்கப்பட்டிருந்த இத்துப்பாக்கி ரவைகள் எதிர்காலத்தில் பாவிக்கும் வகையில் துருப்பிடிக்காத வண்ணம் கிறிஸ் பூசப்பட்டு காணப்பட்டது.

யாழ்ப்பாணம் - பலாலி வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் குறிதத பகுதியிலுள்ள வீதியின் ஓரத்தினை பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் ஆழமாக்கும் பணியில் வீதி அகலிப்பு பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.


இதன்போது ஆழமாக்கும் இடத்தில் மண்ணோடு மண்ணாக வெடிக்காத துப்பாக்கி ரவைகளும் வெளி (24ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க

# வடக்குத் தேர்தலை வைத்தே இந்திய அரசு முடிபெடுக்கும்

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலை இலங்கை அரசாங்கம் நீதியாகவும், நியாயமாகவும் நடத்துகின்றதா என்பதைப் பொறுத்தே, கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வது தொடர்பில் முடிவு செய்யப்படும் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.



கொழும்புக்கு அண் மையில் விஜயம் செய்திருந்த இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர மேனன், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இது குறித்து தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதன்விளைவாக, முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போன்று, வரும் நவம்பரில் இலங்கை அரசாங்கத்தினால் பொநலவாய உச்சிமாநாட்டை சுமுகமாக நடத்த முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வடமாகாணசபைத் தேர்தல் நடததப்படும் முறையைப் பொறுத்தே, கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் (24ஆம் பக்கம் பார்க்க)

அமரர் இராமநாதன் சிவசோதி ஞாபகார்த்த மைதான அபிவிருத்தியினை முன்னிட்டு
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும்
மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2013
இடம் : குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டு மைதானம்
காலம் : 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
நேரம் : காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
2.00 மணி : துடுப்பாட்ட இறுதிப் போட்டி
குறிஞ்சிக் குமரன் VS கோட்டைக்காடு சிறி முருகன்
4.00 மணி : உதைபந்தாட்ட இறுதிப் போட்டி
ஊரெழு றோயல்ஸ் VS இளவாலை ஜங்கென்றிஸ்
மைதான அபிவிருத்தி திறப்பு விழா - 2013 சிறப்பு மலர் வெளியீடு
விளையாட்டு நிகழ்வுகள்
சறுக்கு மரம் ஏறுதல்,
தலையணை சண்டை
பெண்களுக்கான விசேட நிகழ்வுகள்
முன்பள்ளி சிறார்களுக்கான நிகழ்வுகள்
பார்வையாளருக்கான நிகழ்வுகள்
மெய்வல்லுநர் போட்டிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(3424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## IMMEDIATE VACANCIES IN
### INNOVAGE INTERNATIONAL [PVT] Ltd.



சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் 5 புதிய கிளைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு

- DISTRIBUTOR
- SUPERVISOR
- ASS. MANAGER
- ADMINISTRATION

- கல்வித் தகைமை O/L, A/L
- தகைமைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியின் போது ரூபா. 12,000 - 15,000
- பயிற்சியின் பின் ரூபா. 30,000 - 50,000 சம்பளம்.
- வெளிநாட்டில் தொழில் புரிய வாய்ப்பு வழங்கப்படும்.

(3430)

NOTE கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தங்குமிட வசதி உண்டு.

021 720 1521, 077 700 9820, 077 892 0777

## கார் விற்பனை

2000 Model Gold colour Hyundai Accent Car Manual and Auto power Setup Car உடன் விற்பனைக்குண்டு.
உடனடி விலை 1250000/= மேலதிக விபரங்களிற்கு.

(3428) **0771950228**

# கண்ணீர் அஞ்சலி



எமது கட்சியின் மூத்த உறுப்பினரும் மத்தியகுழு உறுப்பினரும் தமிழ்த் தேசிய பற்றாளருமான

**கந்தையா சுந்தரலிங்கம்**

அவர்களது திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம்.
உயரிய தேசப்பற்றாளனை எமது தேசம் இழந்து விட்டது.
எமது கட்சி கொள்கை வீரனை இழந்து நிற்கிறது.
அவரது குடும்பத்தினர் தமது தலைவரை இழந்து தவிக்கின்றனர்
அவர்களது துன்பத்தில் நாமும் பங்கு கொண்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

[3432] அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## அரசியலிலிருந்து விலகுவேன்-மேர்வின்

கட்சியோ, நீதிமன்றமோ, தன்னை ஏதோ ஒரு குற்றத்திற்கு குற்றவாளி என தீர்மானித்தால் களனியில் இருந்து மட்டுமன்றி அரசியலில் இருந்து விலகி விடுவேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனி உப்புவர்ண விஷ்ணு ஆலயத்தின் நுழைவு வாயிலில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு வைபவத்தில் நேற்று கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டால் ஏனைய அரசியல்வாதிகளை போல்நடிக்காது, வேறு தொகுதிகளுக்கு செல்லமாட்டேன். நான் வளர்த்த களனி என்ற குழந்தையை எவருக்கும்பொறுபேற்க கொடுக்க தயாரில்லை.

ஒழுக்கத்தை மீறி செயற்பட்டு லஞ்சம் பெற்று கட்சி துரோகம் செய்து கொலை குற்றத்துடன் சம்பந்தப்பட்டமை தொடர்பிலான விடயங்களில் நான்குற்றவாளி என்று கட்சியோ நீதிமன்றமோ தீர்மானித்தால் நான் அரசியலில்இருந்து ஒதுங்கிகொள்வேன் என்றார். (எ-11)

## வீசப்பட்ட வர்ணங்கள்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இறுதிவருட மாணவர்கள்நடத்திக் கொண்டிருக்கும் வீசப்பட்ட வர்ணங்கள் ஓவியக் கண்காட்சி அனைவரின் வேண்டு கோளுக்கிணங்க இன்று ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. (எ-4)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815,
E-mail : valampurii@yahoo.com,

## SB TRAVELS & TOURS
SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 14,300/- | LONDON | 92,000/- |
| TRICHI | 15,600/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 14,600/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 139,500/- |
| BENGALURU | 23,900/- | NEW YORK | 113,500/- |
| KOCHI | 17,200/- | MELBOURNE | 104,000/- |
| DELHI | 40,200/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 30,300/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 25,800/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 28,700/- | AUCKLAND | 124,100/- |
| SYDNEY | 89,500/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 16,500/-, DUBAI -20,800/-, DOHA - 23,500/-
விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேங்மென்ட் செய்து தரப்படும்.
E-mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481
(C-4088) **No: 132 Sri Kathirasan Street, Colomb13.**
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

## தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-4043) T.P. No.:-021 222 5392


## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

(C-4058) **சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.**

(3414)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

## சர்வதேச தரத்திலான கல்வி

6 பேருக்கு மட்டும்

மலேசியாவில் படிக்க உழைக்க மிகச் சொற்ப கட்டணம்.
உணவு, இருப்பிடம் இலவசம்

O/L, ஆண்கள் 24 வயது.
Hotel முகாமைத்துவ கற்கை நெறி.
4 மாதத்தின் பின் மலேசியாவில் வேலைவாய்ப்பு உறுதி.
சர்வதேச தரச்சான்றிதழ்
6 பேருக்கு மட்டுமே அதிரடி வாய்ப்பு.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



(C-4086)

## எம்மால் மட்டுமே சாத்தியம்

### குடும்பத்தோடு குறுகிய காலத்தில் வெளிநாடு பறக்க பொன்னான வாய்ப்பு.

இதற்கான சட்ட ஆவணத்தை எமது அலுவலகத்தில் பார்வையிடுவதுடன் விரும்பியவாறு பரிசோதிக்கலாம்.

- IELTS அல்லது ஆங்கில மொழி பட்டப்படிப்பு.
- குடும்பத்தினர் அனைவருக்கும் PR உடன் செல்லலாம்.
- உழைப்பும் உறுதி.
- 4 குடும்பங்களிற்கு மட்டுமே வாய்ப்பு.
- 4-5 மாதகால அவகாசம்.

மிகுதியை நேரில் பேசலாம்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090




(C-4081)

## ★★★ LUX ETOILES HOTEL

Pizza Lux Pizza

**Lux Pizza, Lux Swiming Pool, Lux Hot and Cool Bar, Pool Bar**



இது ஓர் இத்தாலிய Pizza இத்தாலிய முறைப்படி, பயிற்சி பெற்ற சமையல் கலை வல்லுநரால் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடு கொண்டு தயார் செய்யப்படும் Original Italian Pizza.

Pizza நமது வெதுப்பகத்தில் 500 பேர் கொண்ட விழாக்களுக்கும், எமது திறந்த வெளியரங்கில் சேவை செய்ய வசதிகொண்டுள்ளோம் என்பதையும் தெரிவித்து கொள்ளுகின்றோம்.

Italian Pizza முன்கூட்டியே, சுவைத்தவர், நமது Pizza மீது தவறு இருப்பின் சுட்டிக்காட்டும் வண்ணம், தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் வெகுமானமும் வழங்கப்படும்.

Lux Pizza கிளைகள்: உரும்பிராய், மானிப்பாய் வட்டாரத்தில் முதலாவதாக வசந்தன் கிறீம் ஹவுஸ், உரும்பிராய் சந்தி, உரும்பிராய். 021-3002128

**இதோ உங்களுக்காக சலுகை விலையில்**

**மாநகர சபை எல்லை விலைப்பட்டியல்**

| ITEAMS | MEDIUM | LARGE |
|---|---|---|
| MUSH ROOM - Veg | 490 | 590 |
| CHICKEN | 590 | 690 |
| SEA FOOD | 590 | 690 |
| MIXED MEAT | 650 | 750 |
| SAUSAGE | 490 | 590 |
| SMALL | 360 | |
| MINI | 160 | |

No.34, Chetty Street Lane, Nallur, Jaffna.
021-2223966, 021-2219227
(C-4089)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவ காலத்தில் வாகன மாற்றுப் பாதைகள்

## யாழ். மாநகரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டெம்பர் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் உற்சவ காலத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் வீதித்தடைகள் மற்றும் வாகன மாற்றுப் பாதை என்பன தொடர்பான தகவல்களை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வெளியிட்டுள்ளார்.

இதன்படி நல்லூர் கந்தசுவாமி கோயிலை சூழவுள்ள பருத்தித்துறை வீதியின் இருமருங்கிலும் கோவில் வீதியின் இருமருங்கிலும் செட்டித் தெருவிலும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதன் காரணமாக யாழ். நகரிலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணிக்கும் வாகனங்கள் யாழ். பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு பொது வைத்தியசாலை வீதியூடாக கண்டி வீதியை அடைந்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக பருத்தித்துறை வீதியை அடைந்து தொடர்ந்து வழக்கமான பாதையைப் பயன்படுத்த முடியும்.

மேலும் பருத்தித்துறையிலிருந்து யாழ். நகர் நோக்கி பயணிக்கும் பேருந்துகள் பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் பகுதியை அடைந்ததும் நல்லூர் குறுக்குத் தெரு வழியாக நாவலர் வீதியை அடைந்து நாவலர் வீதி வழியாக இராசாவின் தோட்டம் வீதியை அடைந்து தொடர்ந்து ஸ்ரான்லி வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து வைத்தியசாலை வீதியூடாக பயணத்தை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் சப்பறத் திருவிழா செப்டெம்பர் 3 ஆம் திகதியும் தேர்த் திருவிழா 4 ஆம் திகதியும் இடம் பெறவுள்ளது. அத்துடன் தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதியும் மறுநாள் பூங்காவனமும் இடம்பெறும். (அ-5)

# நடமாடும் சேவை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அரியாலை அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்தில் ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு நடைபெற விருந்த தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை தவிர்க்க இயலாத காரணத்தால் யா/கனகரட்ணம் மகாவித்தியாலய கலைக்கூடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (அ-5)

# வாரம் ஒரு தகவல்

## திருடனுக்கு கிடைத்த செல்வம்

ஒரு வளமிக்க நாட்டில் துறவி ஒருவர் இருந்தார். அந்தத் துறவியைச் சந்திப்பதற்கு அந்நாட்டு அரசன் மிகவும் ஆவலாக இருந்தார்.

ஒருநாள் அந்த அரசன் அத்துறவியை சந்திப்பதற்காக துறவியின் இருப்பிடம் நோக்கி சென்றார். பின்னர் தொடர்ந்து தினமும் அந்தத் துறவியை சந்தித்தார்.

இவ்வாறு சந்தித்து வந்த அரசன் துறவிக்கு ஏதாவது கைமாறாகச் செய்ய வேண்டும் என்று எண்ணி ஏதாவது பரிசுப் பொதி கொடுக்க முன்வந்தார்.

எனினும் அத்துறவி எதையும் ஏற்பதும் இல்லை. மறுப்பதும் இல்லை என அவனுக்கு தெரிந்திருந்தது.

எப்படியாயினும் அரசால் எதுவும் செய்யாமல் இருக்க முடியவில்லை.

எனவே ஒருமுறை பொன்னாலான ஒரு பிச்சைப் பாத்திரம் ஒன்றை துறவியிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

ஒருநாள் இரவு நேரம் அந்தத் துறவி பாழடைந்த மண்டபம் ஒன்றில் படுத்துறங்க ஆரம்பித்தார்.

அப்போது திருடன் ஒருவன் மெதுவாக அப்பக்கம் வந்தான். அதை அந்தத் துறவி அவதானித்துவிட்டார்.

உடனே அந்தத் துறவி வந்த திருடனை அழைத்து "தம்பி இங்கே வா!... இந்தப் பிச்சைப்பாத்திரத்தை பெற்றுக் கொள். இதற்காகத் தானே வந்தாய்... நான் தூங்கிய பின் வந்து தொந்தரவு செய்யமாட்டாய் அல்லவா?" என்று கூறி அந்தப் பிச்சைப் பாத்திரத்தை அவனிடம் கொடுத்தார்.

அவனும் ஆர்வமாக ஓடிப் போய் அந்த தங்கப் பாத்திரத்தை வாங்கிக் கொண்டு இரவோடு இரவாக மறைந்து விட்டான்.

மறுநாள் விடிந்ததும் அத்திருடன் மீண்டும் வந்து துறவியின் முன் நின்றான். இவனைக் கண்டதும் அத்துறவி "என்னிடம் எதுவுமில்லையே...!" என்றார்.

அதற்கு அந்த திருடன் "இல்லை... உங்களிடம் இந்தப் பொன்னை விட பெரும் செல்வம் இருக்கிறது" என்றான்.

வியந்து போன துறவி "எது?" எனக் கேட்டார்.

அதற்கு அவன் "பற்றற்ற தன்மை...இலேசான உள்ளம்... அது எனக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு என்ன வழி...? உபதேசியுங்கள்" எனக் கூறிக் கொண்டு அவர் முன்னே அமர்ந்தான்.

அவர் விருப்பப்படி அவனுக்கு உபதேசம் செய்ய விரும்பிய துறவி "உன்னுடையதாக நீ எதையும் வைத்துக் கொள்ளாத போது... உன்னிடமிருந்து யாரும் எதையும் எடுத்துக் கொள்ள முடியாது...! என உபதேசித்தார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்நிதியான் கொடியேற்றம்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணிக்கு தேர்த்திரு விழாவும் 21ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (அ-5)

# பாராட்டு விழாவும் நூல் வெளியீடும்

யாழ். இந்து சமயப் பேரவை ஸ்ரீ தில்லை நடராஜர் ஆலயப் பிரதம குருவும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானப் பிரதம குருவுமாகிய ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்களின் இருபத்தைந்து ஆண்டுகால குருத்துவ சேவைப் பாராட்டு விழாவும் நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை மண்டபத்தில் வாழ்நாட் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

# குருபூர்ணிமா குருபாதுஹா பூஜை

வேதவியாசர் ஜெயந்தி தினமான நாளை திங்கட்கிழமை இல.9, செட்டித் தெரு, ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் மாலை 5 மணிக்கு குருபூர்ணிமா குருபாதுஹாபூசை நடைபெறவுள்ளது. தொடர்ந்து வேதவியாசரின் அஷ்டோத்ர சத நாம அர்ச்சனை, குருதேவரின் சத நாம அர்ச்சனை, பஜனை மற்றும் சத் சங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மஹோற்சவம்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். அன்றையதினம் மாலை 5.15 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (அ)

# இராசி பலன்

21.07.2013
(ஆடி 05, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.03 மணிவரை
மூலம் முற்பகல் 10.56 மணிவரை
இராகுகாலம் 4.31-6.01 மணிவரை
சுபநேரம் 9.01-10.31 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பாராத பயணங்கள் கைகூடும், ஆன்றோர் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**இடபம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வெளியூர்ப் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மிதுனம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான நாள், உங்களின் கருத்துக்களை மற்றவர்கள் ஏற்று நடக்க முன்வருவர்.

**சிங்கம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம் பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலையினை உயர்த்த நடவடிக்கை எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம்.

**விருச்சிகம்** உறவினர் வருகையுண்டு, மாலை நேரத்தில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** சஞ்சலங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சயன சுகக்குறைவான நாள், தந்தைவழி உறவில் அனுகூலமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்திதரும் விதத்தில் அமையும், நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள் இடம்பெறலாம்.

**மீனம்** சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், பெருமைகள் வந்து சேரலாம்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 | 100 |
| தக்காளி | 100 | 150 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 140 | 120 | 140 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 170 | 200-240 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 130 | 120 |
| பாகற்காய் | 50 | 60 | 50 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 120 |
| பயற்றங்காய் | 50 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 90 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 110-140 | 140 | 160 | 200 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி ஏமாற்றிய நபருக்கு அபராதம் விதிப்பு


வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி பணமோசடியில் ஈடுபட்ட நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பணத்தை மீள செலுத்துமாறும் அத்துடன் 13 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறும் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் இரத்தினசிங்கம் இரத்தினேஸ்வரன் என்பவரிடம் குறித்த நபர் இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி 75 ஆயிரம் ரூபாவை முதற்கட்டமாகப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர்களுக்கு ஏற்பட்ட நேர்மையின்மையால் பணத்தைக் கொடுத்தவர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த எதிராளிக்கு இரு குற்றச்சாட்டுக்களான நேர்மையின்றி நடந்து கொண்டமைக்கு 3ஆயிரம் ரூபாவும் பணமோசடியில் ஈடுபட்டமைக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த உத்தரவிட்டதுடன் 75 ஆயிரம் ரூபா பணத்தை மறுதவணைக்கு வழக்காளிக்கு செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-24)



நன்றி: ஐலண்ட்

# 700 மில்லியன் ரூபாய் செலவில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு

**யாழ். போதனா வைத்தியசாலை 700 மில்லியன் ரூபா செலவில் விபத்து அதிதீவிர சிகிச்சைப்பிரிவு அமைக்கப்படவுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார். இவ்விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவை அமைத்துக் கொடுப்பதற்கு சீனா முன்வந்துள்ளது எனவும் அவர் கூறினார்.**

இந்த சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கான பணிகள் மிக விரைவில் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான கட்டிடம் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ள பழைய கட்டிடத்தில் அமையவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இப் பிரிவை அமைப்பதன்மூலம் பெருமளவிலான நோயாளர்கள் பயனடையும் அதேவேளை விபத்தின் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு நோயாளர்களை அனுப்புவதையும் குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தற்போதுள்ள விபத்து சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் இடப் பற்றாக்குறை வழமை எனவும் இதனால் சிலவேளைகளில் நோயாளிகள் நடைபாதையிலும் பாய்களிலும் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன எனவும் விபத்து சிகிச்சைப் பிரிவினர் சிலர் தெரிவித்தனர்.

தற்போது சீனா அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ள விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவை காலம் தாமதிக்காது அமைப்பதன் மூலம் இவ்வாறான இடர்பாடுகளை ஓரளவு தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை இருதய சத்திரசிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கும் நாம் முயன்று வருகின்றோம்.

இதனொரு கட்டமாக சுவிஸ் நாட்டு கழகமொன்று இப்பிரிவை அமைத்து தருவதற்கு முன்வந்துள்ளது. எனினும் இது உறுதி செய்யப்படவில்லை என்றார் பணிப்பாளர்.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திரசிகிச்சைப் பிரிவு, நரம்பியல் பிரிவு, நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவு, மூட்டு வாத பிரிவு, இளைய பரிசோதனைக்கூடம், நுண்ணங்கி ஆய்வு கூடம் என்பன இல்லை.

இதனால் இந்நோயாளர்கள் வெளி இடங்களுக்கே அனுப்பப்படுகின்றனர்.

இப் பிரிவுகளை அமைத்துக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு உட்பட வெளிநாட்டவர்கள் முன்வருகின்றபோதும் இங்கு இடப்பற்றாக்குறை, அப்பிரிவு சார்ந்த வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை என்பவற்றை காரணம் காட்டி அவற்றை அமைக்காமல் விடுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள பல பழைய கட்டடங்கள் பாவனையின்றி மூடப்பட்டும் இயங்கா நிலையிலும் உள்ளன.

அவற்றை இடித்து இவ்வாறான பிரிவுகளை அமைக்க முடியும் என யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (அ-4)




# தேவையற்ற முறையில் நடமாடியோருக்கு அபராதம்

வடமராட்சி கரணவாய் பகுதியில் இரவு நேரத்தில் தேவையற்ற முறையில் நடமாடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட 7 நபர்கள் வதிரி ஸ்ரீ பரந்தாமன் ஆச்சிரமத்திற்கு தலா 2 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டுமென பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரணவாய் கிழக்கு கீரிப்பள்ளி என்னும் இடத்தில் இரவு நேரத்தில் தேவையற்ற முறையில் நடமாடியதாக நெல்லியடி பொலிஸார் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

அப்பகுதி மக்கள் இவ்விடயத்தை கையடக்கத் தொலைபேசிமூலம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை தொடர்ந்து வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்களை எச்சரித்ததுடன் வதிரி ஸ்ரீ பரந்தாமன் ஆச்சிரமத்திற்கு தலா 5ஆயிரம் ரூபா செலுத்தி அதன் பற்றுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டார். (அ-ம-24)

# மரண அறிவித்தல்

## இராசையா உதயமனோகரன்

தோற்றம்: 22.11.1961 மறைவு: 17.07.2013



கோட்டைக்காடு மல்லாகத்தினைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராசையா உதயமனோகரன் 17.07.2013 அன்று காலமானார்.

அன்னார் இராசையா பரமேஸ்வரி தம்பதியினரது அன்பு புதல்வனும் இளையவி பார்வதியின் அன்பு மருமகனும் சாந்தகுமாரியின் அன்புக்கணவ னும் நிசாந்தினி, அருள்குமரன், செந்தில் குமரன் ஆகியோரின் அன்பு அப்பாவும் சிறிதரன் சாலினி, தாரகா, ஆகியோரின் மாமாவும் புனிதவதி, ஞானசத்தினம், திரவியபுஸ்பம், திருமுருகன், சந்திரமூர்த்தி, சசிரேகா ஆகி யோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஆத்மா திங்கட்கிழமை சுவிஸில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் — இளையவி திருமுருகன் குடும்பத்தினர்

(3431)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு அபராதம் விதிப்பு

(நெல்லியடி)

நெல்லியடி பொலிஸ் பிரிவில் இரு வெவ்வேறு இடங்களில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இரு நபர்களுக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் பிரிவில் பெண் ஒருவர் 325 மில்லிலீற்றர் கசிப்பை விற்பனை செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் மற்றுமொரு நபர் 150 மில்லிலீற்றர் கசிப்பை விற்பனை செய்தார் எனக்கூறி அவருக்கும் எதிராக வழக்குப் பதியப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் இரு நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாக கண்டு முதலாவது வழக்குடன் தொடர்புடைய பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது வழக்குடன் தொடர்புடைய நபருக்கு 20 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் சான்றுப்பொருட்களை அழிக்குமாறும் மன்றுக்கு உத்தரவிட்டார். (அ-ம-24)

# நீதிமன்றினால் ஏல விற்பனை

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், கையடக்கத் தொலைபேசிகள், இலத்திரனியல் பொருட்கள் உட்பட பறிமுதல் செய்யப்பட்ட ஏனைய பொருட்கள் எதிர்வரும் 27-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவற்றின் உரிமையாளர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமது உரிமை தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். அத்தோடு ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர் நீதிமன்ற வளாகத்தில் ஏல விற்பனைக்குரிய பொருட்களை பார்வையிடலாம் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (9-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்
## திட்ட இணைப்பாளர்

சாந்திகம்

கடந்த பல வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாயமட்ட உளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவை புரியும் எமது நிறுவனம் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உளசமூக மேம்பாடு தொடர்புடைய நடவடிக்கைகளைச் செயற்படுத்த உள்ளது. இவற்றைப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்தக்கூடிய ஒரு பொருத்தமான திட்ட இணைப்பாளரை நாம் உள்ளீர்க்க விரும்புகின்றோம். இத்திட்டம் USAID நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

### தகுதிகள்

- ✔ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல்
- ✔ சமுதாயமட்ட உளசமூகப் பணிகளில் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தினை உடையவராக இருத்தல்
- ✔ சாந்திகம் நிறுவனத்தையும் அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை represent செய்யக்கூடியவராக இருத்தல்
- ✔ மேற்குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆர்வம் உடையவராக இருத்தல்
- ✔ ஒரு திட்டத்தைப் பொறுப்பெடுத்து முகாமைத்துவம் செய்து பொருத்தமான அறிக்கைகளைத் தயாரித்து நிறைவு செய்வதற்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்டிருத்தல்
- ✔ கணனியைக் கையாளும் திறனுடன் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் மற்றும் எழுதும் ஆற்றல் உடையவராயிருத்தல்
- ✔ வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் மற்றும் சிங்கள மொழியில் பேசும் ஆற்றல் என்பவற்றை மேலதிக தகைமைகளாகக் கொண்டிருத்தல்
- ✔ முழுநேர ஒப்பந்த அடிப்படையில் உள்ளீர்க்கப்படும் இந்தப் பணியாளருக்கு மாதாந்தம் ரூபா 35,000/- வழங்கப்படும் அதனுடன் ஊழியர் சேமநிதியும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியும் மேலதிகமாக வழங்கப்படும்.

### விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 29.07.2013

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் எழுத்து செயன்முறை மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கும் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லது தபால் மூலம் அனுப்புவதற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**திரு.எஸ்.வி.சங்கரப்பிள்ளை**
நிறைவேற்றுப் பணிப்பாளர்.
சாந்திகம்.
இல. 8 8/1 கற்பக விநாயகர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9720
மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk

(சி-4042)


# சீமானுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது

(சென்னை)

இராமேஸ்வரத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கெதிராக உரையாற்றிய இயக்குநர் சீமான் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற போது அவ் வழக்கிற்கு சீமான் ஆஜராகாததால் நீதிபதி சதாசிவம் அவருக்கு பிடிவிறாந்து பிறப்பித்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் நடைபெற்ற இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான பொதுக் கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக சீமான் உரையாற்றியதாக கூறி கியூபிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இது தொடர்பான வழக்கு இராமநாதபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (அ-2)

# வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி தேர்



இலங்கை வடபால் வந்திறங்கி
அருள் இ(ஈ)யும் தேவியுடன் தேவர்
உலா வரும் சித்திரத் தேர்
நாடும் பக்தர் குறை தீர்க்கும் தேடி
வந்து இடம் பிடித்து வடமிழுக்க
நாடி வரும் பக்தர்களுக்கு அருள்
பாலிக்க அம்மாவை காசு கொடுத்து
வாங்கலாமோ சும்மா சென்றால் கை
தருவார் எல்லா சுகமும்.

கலைஞர்:- ம.கணேசலிங்கம்.


# மதன் எலக்ரோனிக்ஸ்

- ✔ சகல வகையான LCD, LED CRT TVகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் யாவும் சிறந்த முறையில் காலதாமதம் இன்றி திருத்திக் கொடுக்கப்படும்.
- ✔ LCD, LED CRT TV களுக்குரிய உதிரிப்பாகங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சுதுமலைச் சந்தி
மானிப்பாய்.
தொ.பே: 0776479299
0770648448
(சி/4070) 0774685498



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1532



# சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

## (Employment Pass)

- ✷ இரண்டு வருட வேலை
- ✷ மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
- ✷ மாபில் தொழிற்சாலை
- ✷ மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- ✷ நிபந்தனைகளுக்கு உட்பட்டது

107X1250=133,750/=

(3983) முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122

**அனி இன்டர் நஷனல் எஜுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**
**இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இ. 0214921831, 0214921832**



# லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

- ✷ மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- ✷ போய் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- ✷ மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- ✷ நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(3982) முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122

**அனி இன்டர் நஷனல் எஜுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**
**இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இ. 0214921831, 0214921832**


# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து(V)
நட்சத்திரம்: அவிட்டம் 3
உயரம்: 5' 10"
கி.பா : 64 செ : 7
தகைமை/தொழில்: A/L
தொ.இ:B2059

பிறப்பு: 1987 இந்து(V)
நட்சத்திரம்: உத்தராடம் 1
உயரம்: 5'6"
கி.பா : 20
தகைமை/தொழில்: BSC (IT) District Manger (Softlogic company)
தொ.இ:B2062

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: திருவோணம் 3
உயரம்: 174 cm சூ, செ 1
கி.பா : 46
தகைமை/தொழில்: A/L
UK Citizen (சொந்தக் கடை)
தொ.இ:B2064

பிறப்பு: 1978இந்து (V)
நட்சத்திரம்: கார்த்திகை 2
உயரம்: 178 cm செ 8
கி.பா : 38.25
தகைமை/தொழில்: HNDA, AAT கணக்காளர்
தொ.இ:B2066

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து(Viswakulam)
நட்சத்திரம்: திருவோணம் 1
உயரம்: 5'2"
கி.பா : 14
தகைமை/தொழில்: B.A பட்டதாரி உதவி விரிவுரையாளர்
தொ.இ: G2068

பிறப்பு: 1976 இந்து(Pa)
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா : 8.50
தகைமை/தொழில்: O/L
தொ.இ:G2069

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: சதயம்
கி.பா : 30
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: A/L
அறநெறி ஆசிரியர்
தொ.இ:G2070

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: ரோகினி 3
செ : 2
உயரம்: 5'
தகைமை/தொழில்:
O/L
தையல் (சொந்தமாக)
தொ.இ: G2071


சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிணைப்புக்களை செய்துள்ள போதிலும்

# மின்சாரம் வழங்கப்படவில்லை

(பூநகரி)

**பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூநகரி நல்லூர், ஆலங்கேணி, தெளிவரை ஆகிய கிராம மக்கள் மின்னிணைப்புக்களை செய்துள்ள போதிலும் முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

இக்கிராம மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்டு 3 வருடங்கள் கடந்து விட்டன.

இந்நிலையில் மக்கள் தமது சொந்த செலவில் வீட்டு மின்னிணைப்புக்களை செய்துள்ளனர்.

அத்தோடு மின்னிணைப்புக்களைப் பெறுவதற்காக படிவங்களைப் பூர்த்தி செய்து மின்சார சபையினருக்கு அனுப்பி வைத்து 6 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இதுவரை முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லை.

பூநகரி நல்லூர், ஆலங்கேணி ஆகிய கிராமங்களில் ஒரு பகுதியினருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெளிவரை கிராமத்திற்கு முற்றாக மின்சாரம் வழங்கப்படவில்லை.

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மீள்குடியேறியுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் மேற்படி கிராம மக்கள் தமது சொந்த பணத்திலேயே மின்னிணைப்புக்களைச் செய்தும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மின்சாரம் கிடைக்காத கிராமத்தில் கல்வி கற்று வருகின்ற மாணவர்கள் கற்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மின்னிணைப்புக்களை வீடுகளில் செய்துள்ளபோதும் மின்சாரமின்மையால் தமது பிள்ளைகள் ஏனைய மாணவர்களைப் போன்று நவீன இலத்திரனியல் வசதிகளுடன் கல்வி கற்க முடியாதுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இக்கிராம மக்களுக்கு மின்சாரத்தைப் பெற மின்சார சபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-9-84)

கிளி. மத்திய கல்லூரி

## சமையல் அறை எரிந்து நாசம்

(சிவநகர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி சமையல் பகுதி நேற்று காலை 11 மணியளவில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இச் சமையல் அறை பகுதிக்குள் மாணவர்களுக்கான மதிய உணவு, தேவைக்குரிய ரின் மீன்கள் மற்றும் சமையலுக்கு உரிய பொருட்கள் இருந்ததாகவும் அறிய வருகிறது.

சமையல் வேலைகள் நேற்றைய தினம் நடைபெறாதிருந்தபோதும் அடுப்பு எரிக்கும் பகுதிக்கு எதிர்ப்பக்கமாக உள்ள இடத்திலேயே இத் தீ பரவியுள்ளது.

மேற்கூரைக்கு தகரம் போடப்பட்டிருந்தபோதும் தகரங்கள் கூட தீயினால் எரிந்து போயுள்ளன.

இத்தீயை அணைப்பதற்கு அங்கிருந்தவர்கள் மிகவும் பெருமுயற்சி எடுத்த போதிலும் இச்சமையல் அறை பகுதி முழுமையாக எரிந்து சேதமடைந்துள்ளது. (ம-254)

## பாரவூர்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் ஆலயம் தரைமட்டம்

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான பாரவூர்தி வேகக் கட்டுப்பாட்டை இழந்து பழைய முறிகண்டி பிள்ளையார் ஆலயத்துடன் மோதி ஆலயத்தை தரைமட்டமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மின்சார பொருட்களை ஏற்றி வந்த பாரவூர்தியே வேகக்கட்டுப்பாட்டை இழந்து மேற்குறித்த ஆலயத்துடன் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


(படம்:- ஜெகன்)

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## ஏணைக்கயிறு இறுகியபோதும் மயிரிழையில் உயிர் தப்பிய சிறுவன்

(கனகபுரம்)

ஏணைக்கயிறு கழுத்தில் இறுகி மயிரிழையில் உயிர் தப்பிய சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யூனியன்குளம் கோணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது, ஏணையில் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த வேளை ஏணைக் கயிறு கழுத்தில் இறுகியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த கனகரத்தினம் மிதுசன் (வயது 9) என்ற சிறுவனே ஏணைக் கயிறு கழுத்தில் இறுகி மயிரிழையில் உயிர் தப்பி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (ம-259)

## கிளிநொச்சியில் சர்வதேச கண்காட்சியும் வர்த்தக சந்தையும்

(சிவநகர்)

சர்வதேச கண்காட்சியும் வர்த்தக சந்தையும் முதற் தடவையாக கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் கண்காட்சியும் வர்த்தக சந்தையும் மூன்று நாட்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் நளின் ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

வடமாகாண விவசாயத்துறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இக்கண்காட்சியில் விவசாய நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயத்துறை மேற்கொள்வதில் அனுபவம் பெற்ற 50 கம்பனிகள் கலந்து கொள்ளவுள்ளன.

அத்தோடு சுமார் 100 கடைத் தொகுதிகள் கண்காட்சியில் இந்தியா, மலேசியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய உள்நாட்டு பல்தேசிய கம்பனிகள் பலவும் பங்கேற்கவுள்ளன.

இக்கண்காட்சி தொடர்பான மாநாடு ஒன்று அண்மையில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், தேசிய எக்ரோ சபையின் செயலாளர் ரோஹித்த நாணயக்கார ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி கருத்து தெரிவிக்கையில்,

வடக்கின் பிரதான மையமாக கிளிநொச்சி விளங்குவதனாலேயே இக்கண்காட்சியினை இங்கு நடத்த தீர்மானித்துள்ளது எனவும் மேற்படி கண்காட்சி விவசாயிகளுக்கு மாத்திரமின்றி வடபகுதி மக்களுக்கும் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் பெரிதும் நன்மையளிக்கும் என கிளிநொச்சி அரசாங்க அதிபரும் கருத்து வெளியிட்டனர்.

மேலும் கொழும்பைப் போன்று வடபகுதி மக்களும் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டின் மூலம் விவசாயத் துறையை மேம்படுத்த வைப்பதே இக் கண்காட்சியின் நோக்கம் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலைய பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-9-254)





அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ சுற்றுலாவை கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அண்மையில் மேற்கொண்டபோது அம்பாந்தோட்டை அரசாங்க அதிபர் ஆர்.சி.டி.சொய்சா, கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட குழுவினரை வரவேற்பதையும் அலுவலக நடைமுறைகளை காண்பிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

## தமிழ்மொழி பயிற்சியை நிறைவுசெய்த 62 பொலிஸார்

வவுனியா, மன்னார், மாங்குளம் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 62 பொலிஸார் தமிழ்மொழி பயிற்சி நெறியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர். கடந்த 5 மாத காலமாக வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் இடம்பெற்றிருந்தது.

தமிழ் பிரதேசங்களில் பணியாற்றும் சிங்கள மொழியிலான பொலிஸ் அதிகாரிகள் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை அறிந்து செயற்படவும் அவர்களது தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொடுக்கும் முகமாகவும் இப்பயிற்சி நெறி இடம்பெற்று வருகின்றது. இறுதி நாள் நிகழ்வின்போது தமிழ் மொழி பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இந் நிகழ்வுக்கு வவுனியா, மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் எச்.விக்கிரமசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமுத்திரஜீவா, வவுனியா பொலிஸ் நிலைய கணக்கு ஆய்வாளர் எஸ். இரவிச்சந்திரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.அ.மரிய ஜெனிற்றா, சாவகச்சேரி

வணக்கம் அண்ணா!

இன்றைய மனிதர்கள் தம் வாழ்வில் எடுக்கும் எந்த செயற்பாட்டிலும் தோல்வியை கண்டு துவண்டு அதில் இருந்து மீள முடியாமல் மடிந்து போகின்றார்களே! இதற்கு நீர் என்ன சொல்ல விரும்புகின்றீர்?

*தோல்வியைக் கண்டு பயந்தால் சிலந்தி வலை பின்னிடுமா? சிங்கம் இரை தேடிடுமா? மனிதனை விட ஏனைய எல்லா உயிரினங்களுக்கும் தோல்வியை எதிர்த்துப் போராடும் குணம் உண்டு. அதனால் அவை வெற்றி கொள்கின்றன. ஆனால், மனிதனோ ஒருமுறை தோல்வி கண்டு விட்டால் அதை மீண்டும் முயற்சிப்பதில்லை. முயற்சி திருவினையாக்கும் எனும் பழமொழியை உருவாக்கியவன் மனிதன். அதை கடைப்பிடிக்க தவறி விடுகின்றான்.*

---

சி.நிஷாந்தன்

அன்பின் வியாசர் சேர்!

நம் தமிழ்மொழி சர்வதேச மொழியாக மாறினால் எப்படியிருக்கும்?

*நன்றாகத்தான் இருக்கும். ஆனால், அதைப் பார்ப்பதற்கு எந்தத் தமிழனும் உயிருடன் இருக்கமாட்டானே!*

---

கனகம்மா சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

பத்திரிகைகளில் 22 வயது பெண்ணுக்கும் 90 வயது ஆணுக்கும் திருமணம் என்று படத்துடன் போடப்பட்டிருந்தது பார்த்தீர்களா? இளம் பெண்கள் வயது போன கிழவன்மாரை முடிக்கலாமா?

*பலபேருக்கு திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது. சிலபேருக்கு திருமணம் பணத்தில் நிச்சயிக்கப்படுகிறது. பணம் பாதாளம் வரை பாயும் என்பதற்கு இது நல்ல உதாரணம்.*

---

## தனிமையில் நின்று சிரிப்பவர் பற்றி?




கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

அன்பின் வியாசரே!

ஆடிக்கூழ் குடித்தீர்களா? சோமசுந்தரப் புலவரின் பாடலை ஒருமுறை பாடிப்பார்த் தீர்களா?

*பார்த்தேன் பார்த்தேன் பார்த்தேன் சுடச்சுட ரசித்தேன் ரசித்தேன் ரசித்தேன்... பக்கத்து வீட்டு சிறுவர்களைக் கூப்பிட்டு கூழ் குடிக்கக் கொடுத்து 'ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை'.... என பாடலை சொல்லிக் கொடுத்தேன். அந்தச் பிஞ்சுச் சிறுவர்கள் ஏ.ஆர். ரஹ்மானின் பாணியில் பாட ஆரம்பித்து விட்டார்கள். சிவ சிவா காது இரண்டையும் பொத்தியபடி வீட்டிற்குள் ஓடிவிட்டேன்.*

**அன்பு வாசகர்களே....!**

**உங்கள் கேள்விகளை**

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற

முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## ஆடிக்கூழ் குடித்தீர்களா? சோமசுந்தரப் புல வரின் பாடலை ஒருமுறை பாடிப்பார்த் தீர்களா?

வே.வே. அகிலேஸ்வரன் மருதங்கேணி

வியா மாமா!

சொர்க்கம், நரகம் என்று உண்டா?

*நீர் இன்னமும் திருமணம் முடிக்கவில்லை போலும். உமக்கு திருமணம் முடிந்தால் தெரியும் சொர்க்கம் எது நரகம் எது என.*

---

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

நீண்டகால ஆண்-பெண் நட்பு காதலாக மாறுவது வரவேற்கத்தக்கதா?

*பெற்றோர் ஏற்கக் கூடிய காதலாக இருந்தால் வரவேற்கத்தக்கது.*

---

சுதன், அல்வாய் மேற்கு

அன்பின் வியா!

தனிமையில் நின்று சிரிப்பவர் பற்றி?

**கொஞ்சம் சிரிங்கப்பா...**



"மன்னா, தங்களை உயிரோடு பிடிப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் என எதிரிநாட்டு மன்னர் அறிவித்துள்ளார்..

"தேவையில்லாமல் ஏன் வீண் செலவு அவருக்கு, 'நூறு பொற்காசுகள் கொடுத்தால் நான் உயிரோடு அவர் இருக்கும் இடத்திற்கு வரத் தயார்'னு ஓலை அனுப்பிவையும் தளபதி..."

ச.புவித்ரா , சாவகச்சேரி

வியாசர் அண்ணா!

யாழ்ப்பாணத்தில் அதிகம் நடைபெறுகின்ற விபத்துக்களை தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

*விபத்து விளைவித்தவருக்கும் விபத்து விளைவிக்க காரணமாய் இருந்தவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை அறிமுகப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் ஓரளவு குறைக்கலாம். அதைவிட முக்கியமானது நாம் அனைவரும் வீதி விதிமுறைகளை தெரிந்து கொள்வது.*

*ஒருவன் தனிமையில் நின்று சிரித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏதும் பிரச்சினை இருக்கும் என எண்ணி இன்னும் சிலரை கூட்டிக் கொண்டு அவன் அருகில் சென்றேன், அவனுக்கு ஏதும் உதவி செய்யலாம் எனும் எண்ணத்துடன். எங்களைக் கண்ட அவன் 'கொஞ்சம் இருடா செல்லம்' என கூறிவிட்டு எங்கள் பக்கம் திரும்பினான். அதன் பின் தான் புரிந்தது அவன் செல்போனில் பேசிக் கொண்டிருப்பது.*

# மாகாண அதிகாரங்களை செயற்படுத்தியமை தவறு

## சிறிவிமலதேரர் கவலை

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பையில் இருந்து தற்போது விடுதலைப்புலிகள் வெளியில் குதித்துள்ளதாக கெட்டம்பே விகாராதிபதி கெப்பட்டியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் சில கருத்துக்கள் மூலம் இது உறுதியாகியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டம் மூலம் பெற முயற்சித்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக பெற முயற்சித்து வருகி றது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்காக நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க ஆயிரக்கணக்கான படையினர் தமது உயிர்களை தியாகம் செய்யவில்லை.

நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக 1988 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து மத்திய அரசாங்கம் கைகளை கட்டிக் கொண்டு அந்த முறைமையை செயற்படுத்தியதன் காரணமாக தற்போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

எதிரானவர்களின் கைகளுக்குள் வடக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் சென்றால் பல பிரச்சினைகள் ஏற்படும் எனவும் அது தற்போது வெளிப்படையாக தெரிய ஆரம்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் இவ் வருடத்திற்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியினை அண்மையில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தினர். இதன்போது மூத்த வீரர்கள் வரிசையில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிறந்த கரப்பந்தாட்ட வீரர் ச.க.தேவசிகாமணியால் யாழ். இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் பிரதம முகாமையாளராகிய தி.ஜேசுதாசனுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பத்திரம் வழங்கப்பட்டிருப்பதையும் கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர் ஆகியோரை[illegible]

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1532
E-mail : valampurii@yahoo.com,
valampuriijaffna@gmail.com

# மரண அறிவித்தல்

# கந்தையா-சுந்தரலிங்கம்

## (ஸ்தாபகர்-வெஸ்ரா இன்டஸ்ரீஸ்)



ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் 20/07/2013 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா-நாகரத்தினம் தம்பதியரின் புத்திரனும் உயரப்புலம் ஆனைக்கோட்டை காலஞ்சென்ற சீனிவாசகம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் இரஞ்சினியின் அன்புக் கணவரும் சுதர்ஷன், வாகீசன், சிவதர்ஷன் (மாணவன் வர்த்தகம்-2013 யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துசிதாவின் அன்பு மாமனாரும் சுகீசனின் ஆசைப் பேரனும் காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் சபாநாதன், காலஞ்சென்ற தில்லைநாயகி, லோகநாயகி மற்றும் திருமங்களநாயகி, செல்வநாயகி, ஞானதேவன் (FINLAND) காலஞ்சென்ற இராஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரோஜினி ஜெகநாதன்(FRANCE), ஜெகதீசன் (LONDON) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று 21.07.2013 (ஞாயிறு) பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உயரப்புலம், ஆனைக்கோட்டை**
**0776007775**
**[illegible]0045**
**[illegible]5832**

(3422)

**தகவல்:-**
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினராக இருந்தாலும் அரசியல் தொடர்புகள் இல்லை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தனது உறவினராக இருந்தாலும் அவருடன் அரசியல் ரீதியாக எந்த தொடர்புகளுமில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தான் நம்புவது வர்க்க வேறுபாடுகளையே அன்றி இன ரீதியான அடையாளங்களை அல்ல என அவர் மேலும் கூறியுள்ளார்.

எனது அரசியலும் உறவு முறையும் ஒன்றுடன் ஒன்று ஒத்துபோகும் விடயங்கள் அல்ல. நான் 15 வயதில் எனது பாடசாலைப் பருவத்தில் அரசியலை ஆரம்பித்தவன். நான் ஒரு கம்யூனிஸ்வாதி. குல பேதங்களையும் வகுப்பு வாதங்களையும் எதிர்ப்பவன். நாங்கள் வர்க்க போராட்டத்தையே நம்புகிறோம்.

இன அடையாளங்களை நாங்கள் நம்புவதில்லை. இதனால் சகல மக்களுக்கும் அவர்களின் அடையாளத்திற்கு ஏற்ப உரிமை களை வழங்க வேண்டும்.

நாட்டில் கஷ்டப்படும் மக்களுக்கான அரசியலையே நான் தெரிவு செய்துள்ளேன். இதனை உறவின் முறையாலோ வேறு எந்த விதத்தினாலோ மாற்ற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மோசடிகளில் ஈடுபடுவோரை தேர்தலில் நிறுத்த வேண்டாம்

## ட்ரான்பெரன்ஸி அமைப்பு

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரை தேர்தலில் நிறுத்த வேண்டாம் என ட்ரான்பெரன்ஸி இன்டர்நசனல் அமைப்பு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமேல், வடக்கு மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின் போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது.

கடந்த ஓராண்டு காலப்பகுதியில் பிரதேச சபை மற்றும் மாகாண சபை அரசியல்வாதிகளில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார்கள்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவது மக்கள் பிரதிநிதிகளை தெரிவதில் குழப்ப நிலைமையை ஏற்படுத்தும்.

இது நாட்டுக்கும் சமூகத்திற்கும் இழைக்கப்படும் துரோகமாகவே கருதப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளின் சொத்து விபரங்களை திரட்டி அவர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நசனல் அமைப்பு கோரியுள்ளது. (அ-2)

# கொழும்பு மாநகரசபைக்குள் டெங்குக்காய்ச்சல் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகரசபையின் பிரதம வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தின் முதல் 6 மாத கால பகுதிக்குள் 760 மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஆண்டில் முதல் ஆறு மாத பகுதிக்குள் 620 மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், இவ்வருடம் அத்தொகை அதிகரித்துள்ளது.

இவ்வருடத்தின் முதல் 6 மாதகாலப் பகுதிக்குள் கொழும்பு நகர பாடசாலைகளில் 720 மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு தடுப்பு நடவடிக்கைகளின் போது பல பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பரவும் விதத்தில் பாடசாலைச்சூழல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதோடு அப்பாடசாலைகளில் உடனடியாக சுத்தப் பணிகளை மேற்கொள்ளுமாறும் மாணவர்களுக்கு சில நோய்கள் பர வாத சிறந்த சூழலை ஏற்படுத்துமாறும் துண் டுப்பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புலிகளின் நிதி சேகரிப்பு வெளிநாடுகளில் தொடர்கிறது

## சுட்டிக்காட்டினார் பீரிஸ்



வெளிநாடுகளில் தொடர்ந்தும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நிதிச்சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்கள் உரிய கவனத்தை செலுத்த வேண்டும் என்று இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய உறவுகள் குழுவிடம் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் பல தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

எனினும் சில நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்வதாக ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இது தொடர்பில் குறித்த நாடுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (அ-2)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் முதன்மை நிலை ஒன்றின் தடகள விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் விருந்தினர்கள் மாலை அணிந்து வரவேற்கப்படுவதையும் கோப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். சற்குணராசா உரையாற்றுவதையும் மாணவர்களின் சுளகு நடனத்தினையும் படங்களில் காணலாம்.

# சட்டவிரோத குடியேற்றங்களுக்கு இனி ஆஸியில் இடம் கிடையாது

## ஆஸி.பிரதமர் அறிவிப்பு-இலங்கை வரவேற்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு படகுகளில் சென்று அரசியல் தஞ்சம் கோருவார் நீண்ட காலம் அங்கு தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரி வருபவர்கள் பப்புவா நியுகினியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

உண்மையில் அகதி அந்தஸ்தை கோருவோர் அங்கு அனுப்பி வைக்கப்பட ஏனையோர் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பிரதமரின் இந்த அகதிகள் தொடர்பான கொள்கை வெளியிடப்பட்டுள் ளது.

இனிமேல் படகுகளில் வந்து அவுஸ் திரேலியாவில் யார் தஞ்சம் கோரினாலும் அவர்களுக்கு அந்த சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. தொடர்ந்தும் வருபவர்கள் பப்புவா நியுகினியாவுக்கே அனுப்பி வைக்கப்படுவர். இது தொடர்பாக அந்நாட்டுடன் உடன்பாடு ஏற்படுத்தி கொள்ளப்பட்டுள்ளது.

ஆபத்தான கடல் பயணத்தை மேற் கொண்டு மக்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருவதை தடுப்பதே இதன் நோக்கமாகும். அவுஸ்திரேலியாவில் போதுமான மக்கள் அவுஸ்திரேலியாவிற்கு அழைத்து செல்வதாக கூறி ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள் மக்களை ஆழ்கடலில் மூழ்கடித்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவுக்கு உறுதியான எல்லை பாதுகாப்பு படை உள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். அவுஸ்திரேலியாவின் அறிவிப்பை இலங்கை வரவேற்றுள்ளது.

படகுகள் மூலம் நாட்டுக்குள் வரும் சட்டவிரோத குடியேறிகளை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அவர்களை பப்புவா நியுகினிக்கு அனுப்பப்போவதாக அவுஸ்திரேலியா வெளியிட்டுள்ள அறிவிப்பை இலங்கை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கும் பப்புவா நியுகினிக்கும் இடையில் இது தொடர்பாக உடன் படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் பின்னர் தகவல் வெளியிட்டுள்ள அவுஸ்திரேலியா பிரதமர் கெவின்ரூட் சட்டரீதியற்ற அகதிகள் நேரடியாக பப்புவா நியுகினிக்கு அனுப்பப்படுவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அகதிகளாக இனங்காணப்படுவோர் அந்த நாட்டிலேயே குடியமர்த்தப்படுவர் என்றும் ரூட் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு தீர்வின்றேல் தொழிற்சங்க நடவடிக்கை

## அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் எச்சரிக்கை




(கொழும்பு)

**தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகள் மிக நீண்ட காலமாக தீர்வின்றி தொடர்கின்றன என்று குறிப்பிட்டுள்ளது.

இவை சம்பந்தமாக முகாமைத்துவத்திற்கு எழுத்து மூலமாகவும் நேரடியாக கலந்துரையாடல் மூலமாகவும் தொழிற்சங்கக் கூட்டத்தினூடாகவும் பலமுறை முயற்சி செய்தும் அவை பயனற்றதாகவே போயுள்ளது.

இதன் காரணமாக எமது அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்திலுள்ள சகோதர, சகோதரிகள் அனைவரும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளதோடு எதிர்பார்ப்பற்ற நிலைக்கும் உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலைமை அஞ்சல் திணைக்கள சேவையின் தரத்தைக் குறைப்பதற்கு நேரடியாக வழிவகுக்கும்.

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவை அதிகாரி அ, ஆ தரத்திற்கான பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கடந்த ஏழாண்டுகளுக்கு மேலாக வழங்கப்படவில்லை.

முகாமைத்துவ உதவி ஒருங்கிணைந்த தபால் சேவை, 3 ஆம் நிலை அதிகாரிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, சம்பள முரண்பாடு ,நிரந்தர நியமனம் இன்மை போன்ற பிரச்சினைகளும் 2013 ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களின் கூடுதலான பெண் உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் உள்ளிட்ட இன்னும் பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து எமது உயர்மட்டக்குழு கடந்த ஜுன் மாதம் கலந்தாலோசித்ததோடு அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று முகாமைத்துவத்திற்கு இரண்டு வார கால அவகாசம் கொடுத்தோம்.

எனினும் இன்னமும் எமது கோரிக்கைகள் குறித்து முகாமைத்துவம் கரிசனையற்று இருக்குமாயின் எமது அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோத்தர்கள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு செல்வது தவிர்க்க முடியாததாகி விடும். ஏனவே தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கும் சரியான தினம் என்ன வகையான தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

அதற்கு எமது அங்கத்தவர்களைத் தயாராய் இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோத்தர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் ஏ.டபிள்யூ.டி ரணதுங்க அதன் சங்க அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தமிழ் தேசிய இராணுவம் உருவாக்கும்

### அமைச்சர் பஷில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வடமாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் தமிழ்த் தேசிய இராணுவம் ஒன்று அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தி ஹிந்து பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண பொலிஸ் அதிகாரங்களின் அடிப்படையில் தனியான இராணுவ அலகுகளை உருவாக்க எவ்வித சாத்தியமும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மாகாண இராணுவ அதிகாரங்களை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு காணி ,பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் குறிப்பிட்டார்.

1988 ஆம் ஆண்டு ஈ.பி. எல்.எப். வடக்கு,கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய இராணுவமொன்றை அமைக்க முயற்சித்ததாக பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் மீளவும் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாது என்பதை உறுதிப்பட குறிப்பிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே மாகாணசபைகளுக்கு முழு அளவில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என வலியுறுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பிரச்சினைகளை முறையிட குறுந்தகவல் முறை அறிமுகம்

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முறைப்பாடு செய்வதற்கென புதிய குறுந்தகவல் முறையொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிமுகம் செய்துள்ளது.

இப்புதிய குறுந்தகவல் முறையானது அமுலுக்கு வந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதன்படி இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா நேற்று குறுந்தகவல் முறைப்பாடு முறையை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையில் எந்தப் பாகத்தில் இருந்தும் பணியகத்தின் கிளை அலு வலகங்களினூடாக செய்யப்படும் முறைப்பாடுகள் குறுந்தகவலூடாக வேலைவாய்ப்பு முகவருக்கு அறிவிக்கப்படும். அதனைப் பெற்றுக் கொள்ளும் முகவர் முறைப்பாடு தொடர்பான தீர்வை 48 மணி நேரத்திற்குள் அறிவிக்க வேண்டும்.

இல்லையேல் அவர் நேரடியாக விசாரணைக்கு அழைக்கப்படுவார். முறைப்பாட்டாளர் நாட்டின் எந்தப் பாகத்தில் இருக்கிறாரோ முகவர் அவரிடத்துக்கு சென்று விசாரணைகளுக்கு முகவர் முகம் கொடுக்க வேண்டும். முறைப்பாட்டாளர் பிரதான அலுவலகத்துக்கு வர வேண் டிய அவசிய மில்லை. (அ-2)

### இணையத்தளங்கள் குறித்து முறைப்பாடுகள்

இவ்வருடத்தின் முதல் 6 மாத காலப் பகுதியில் இணையத்தளங்கள் தொடர்பான 700 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக கணனி பயன்பாட்டாளர்களின் அவசர உதவி மற்றும் பொறுப்புகளுக்கான குழு தெரிவிக்கின்றது.

இதில் பெரும்பான்மையான முறைப்பாடுகள் பேஸ்புக்கிலுள்ள போலியான கணக்குகள் தொடர்பானதெனவும் அக்குழுவின் பேச்சாளர் ரொஷான் சந்ரகுப்தவே தெரிவித்துள்ளார்.

இது தவிர மின்னஞ்சல் ஊடான மோசடிகள் தொடர்பாகவும் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




தாதிய மாணவ சேவை அர்ப்பணிப்பு விழா நேற்று முன்தினம் காலை யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் அதிபர் செல்வி வல்லிபுரநாதன் ரயூலா தேவி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தாதிய பயிற்சி கல்லூரி அதிபர் பிரதான தீபம் ஏற்றுவதையும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா உரையாற்றுவதனையும் விருந்தினர் அமர்ந்திருப்பதையும் சேவையில் இணைத்துக் கொண்ட மாணவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:–உ.சாளீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ தந்த நினைவுகள்

தோழி அன்பை யாசித்த எனக்கேன்
இந்தப் பிரிவை விட்டுச் சென்றாய்...?
பிரிவு நிச்சயம் என்று தெரிந்தபோது
சுவாசக்காற்று நெஞ்சுக்குழிக்குள் சிக்கிக்கொண்டது
என் உள்ளத்தில் ஓராயிரம் சோகங்கள்
மௌன யாத்திரை போக தினம் விழிகள்
வடிக்கும் கண்ணீர் மழை!
ஒவ்வொரு நிமிடமும் மறக்க முயலும் உன்
ஞாபகங்கள் மீண்டும் உன்னையே
நினைவூட்டுகின்றன...
யுகம் யுகமாய் என்னுள் அடைகாக்க எண்ணிய
நம் நட்பு தேய் நிலவாய் ஆனாலும்
பூதம் காத்த புதையலாய் உன் நினைவுகளை
நெஞ்சுக்குள்ளே பத்திரப்படுத்தி வைப்பேன்
தோழியே...

பா.கங்கா, வண்ணார்பண்ணை.

## முதுமை

தாண்டுபோன கண்கள் இரண்டும்
கலைந்துபோன கனவுகள் சொல்லும்
குழி விழுந்த கன்னம் இரண்டும்
அனுபவத்தின் ஆழம் சொல்லும்
துரையலையாய் நரைத்தமுடி
தலைமுறையின் தகவல் சொல்லும்
கூன் விழுந்து வளைந்ததேகம்
தான் சுமந்த சுமைகள் சொல்லும்
தடுமாறும் பாதம் இரண்டும்
தடம்பதித்த பாதை சொல்லும்
வரி விழுந்த தோல்கள் இரண்டும்
வலி மிகுந்த வாழ்வைச் சொல்லும்
அவர் போட்ட அத்திபாரம்
மாடிவீடாய் மாறி நிற்கும்
அவர் வளர்த்த மரநிழலில்
ஆடு மாடு கட்டி நிற்கும்
அவர் மட்டும் முதியோர் இல்லத்தில்
முகவரி தொலைத்தவராய்....

அ.அஜந்தன், கந்தர்மடம்

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
பல் துலக்காமலே சென்ட் அடித்தான்
பல்சர் பைக்கினை முறுக்கினான்
கெல்மட் இடுக்கணியில் செல்போன்
ஆ... அப்புறம்... அப்படியா? ம்...
பறந்தது பல்சர் நூறில்
மஞ்சள் கோட்டை கடந்த முதியவர்
மண்டையைப் பிளந்தான்
எந்தப் பத்திரமும் இல்லை அவனிடம்
பத்திரங்கள் பல வைத்திருந்தவருக்கு
இறுதிப்பத்திரத்தைக் கொடுத்துவிட்டான்

மாவை. நா. கஜேந்திரன்



## எப்படி மறப்பது....

உன்னையும் என் காதலையும்
எப்படி மறப்பேன்- நான்
மறப்பதென்றால் என் உயிர்
என்னைவிட்டு பிரிகின்றபோதுதான்
நம் காதலுக்கு சாட்சியாய்- நாம்
தடம்பதித்த பூங்காவனங்களும்
பேசிய வார்த்தைகள்- பரிமாறிய
புகைப்படங்கள்- உயிலாக வரைந்தெடுத்த
காதல் கடிதங்களும் இன்று கனத்துப்போன
இதயங்களில் கானல்நீராய்
கண்ணீரிலே காவியம் பாடுகிறது!
என்ன செய்ய நான்- எப்படி மறப்பது
நம் காதலின் நினைவுகளை
முள்ளோடு வாழுகின்ற ரோஜா போல்
உன் நினைவோடு வாழ்கின்றேன்!
நீ தந்துவிட்டுச் சென்ற பிரிவின்
வலிகளோடு வார்த்தைகளை ஊமையாக்கி
வாழ்கின்றேன்! உனக்கானவன்
என்று சொல்லிக்கொண்டு!

எஸ்.பாஸ்கரன், சண்டிலிப்பாய் வடக்கு

## காத்திருப்பு

நான் சிரிப்பது தான்
உனக்குத் தெரியும்
நான் அழுவது
உனக்குத் தெரியாது
நீ துடைக்கவேண்டிய
கண்ணீர் துளிகளை
நானே துடைத்துக்கொள்கிறேன்
என் விரல்களால்
யாரும் வரவில்லை
தேசம் அழுதபோது

அதுபோல் நீயும்
வரவில்லை
நான் அழுதபோது
என் காத்திருப்புகள்
விழுந்தது ஏமாற்று வலையில்
நீ வரப்பிந்தியது
அது தாமதமல்ல
வெறுப்பு

உயிரோவியன்

# கவிதைக் கலசம்



## காணி நிலம் வேண்டும்

குடியிருப்பதற்கு
உறுதியுடன் காணியும்
உயிர் காக்கும்
பயிர்ச்செய்கையை
மேம்படுத்த
மேட்டுநிலமும்
மேல் மட்டத்தினருக்கே
மேலும் கிடைக்கின்றது
வழிவகை தெரியாது
இருந்ததையுமிழந்து
வறியவர் தவிக்கின்றார்
தரிசனம் தரும்
உரியவர்களுமிதில்
கரிசனமெடுப்பதில்லை.

க.நாகராசா
சாவகச்சேரி

## கருணை நிலை

கல்விதனை தான் இழந்தாலும்
கண்மணி அடையவேண்டுமென
ஆடையணிவித்து அழகுபார்க்கும்
அன்னையின் கருணை நிலை

ஆர்.ஜெயா
அராலி

## கற்கை நன்றே

தன் வாழ்க்கைதான்
காலத்தின் பிடியில் சிக்குண்டு
அலங்கோலமாகிவிட்டது
பிச்சை எடுத்தென்றாலும்
தன் மகளை கல்வி கற்கவைத்து
பல பட்டங்கள் பெற்று
புகழோடு வாழவைக்க
பள்ளிச் சீருடை அணிவித்து
அவளைப் பாடசாலைக்கு அனுப்ப
ஆயத்தமாகின்றாள் இத்தாயவள்

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

# மௌனத்தின் தேடல் - 163

## எப்படி வாழ்வது?

மௌனத்தின் தேடலே...
என்னை மன்னித்துவிடு!
இந்த நிலைமையைப் பார்க்க
எனக்கு கவிதை வரவில்லை
கண்ணீர்தான் வருகிறது
நரக வாழ்க்கை!
கடவுள் ஏன்?
எம்மைப் படைத்தான்!

இ.சுமன்
புலோலியூர்

## கல்விதான் கடைசிவரை...

அன்று கடத்தப்பட்ட அப்பா
இன்று காணாமற் போனோர்
பட்டியலில்...!
அதி உயர் வலயங்களால்
நாம் குடியிருந்த காணிகளும்
நமக்கில்லையாம்...!
என்ன செய்ய என் மகளே...!
கல்விதான் கடைசிவரை
உனக்கு வழி...!
எந்நிலையிலும் அதை
கைவிடாதே...!

எஸ்.சுரேஸ்
சாவகச்சேரி

## உயிர்ப்பு

குந்தியிருக்க குடிசையில்லை
சூழ்நிலையிலும்
கல்வித்தீபம் அணையாதிருக்க
துணைபுரியும்
இத்தாயின் பிரயாசை
எத்தகையதென்பதை
இறுதித்தேர்வே
பிரதிபலிக்கும்

அ.கேசவன்
கல்வயல்

## வருந்தாதே

வாழ்க்கை சுமை என
வருந்தாதே அம்மா
பள்ளிக்கு அனுப்பு
பணியும் வை[illegible]
நம் கண்முன்[illegible]

## தவறு

நான் படிக்கவில்லை
என்னைப்போல் என்
பிள்ளையும்
இருந்திடக்கூடாது- நான்
சிறுவயதில் செய்த தவறு
என்னையும் என்
பிள்ளையையும்
ஒதுக்குப்புறத்தில்
விட்டிருக்கின்றது

ச.புவித்ரா
சாவகச்சேரி

## வீரத்தின் வெளிப்பாடு

அம்மா நீ கலங்கவேண்டாம்
எதிர்காலத்தில் உனக்கும்
புகழ் சேர்த்து
நானும் கல்வியால்
உயர்வடைய
துன்பத்திலும் என்னை
பள்ளிக்கு அனுப்பும் அம்மா
எங்கள் வாழ்வுக்கு
இறைவன் துணைபுரிய
வேண்டுகின்றேன்

ஸ்ரீ.பிரதீப்
யாழ்ப்பாணம்

## தாயே நன்றி

நயம்பட உரைத்து
நியாயமுணர்த்தி
தாயன்பாலே
பயமறியோமே
தூய குணத்தால்
துயரம் போக்கி
சுயமாக சிந்தித்து
தயவின்றி வாழ
ஓயாத அலைபோல்
எமக்காய்
அயராது உழைக்கும்
தாயே நன்றி

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## உன்னால் முடியும்

இழப்பதற்கு எம்மிடம்
ஒன்றும் இல்லைதான்
நீ படித்தால் பெறுவதற்கு
இந்த உலகம்
உன் காலடியில்

பா.மேரிசரீனா
பருத்தித்துறை

## நம்பிக்கை

வறுமை எங்கள்
கல்விச் சமூகத்தின்
கல்விக்கு
தடையல்ல- எங்கள்
ஒற்றுமையும் விவேகமும்
முயற்சியும் பயிற்சியும் -எங்கள்
சமூகத்தின் கல்விக்கு- அவை
ஒளிவிளக்குகள் ஆகும் என்பதில்
நம்பிக்கையுண்டு

ஆ.உஷாந்தினி
மட்டுவில்

## இழந்திடோம் கல்வியை

சிறுவர்களின் உரிமை
கல்வி அதை நாம்
எங்கு வாழ்ந்தாலும்
இழக்கமாட்டோம்
கல்வியைக் கற்றே
நாளை வாழ்வில்
உயர்வோம்

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -164



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 25.07.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லி மலை



## ஆன்மீகம் 66

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

கொல்லிமலை மீது நூற்றுக் கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. மலைவாழ் மக்கள் அங்கு வாழ்கின்றனர். இம்மலையின் சில பகுதிகளுக்கு சாலை வசதிகள் இருக்கின்றன. வாகனங்கள் சென்றுவர வசதியான சாலைகள்- பல கிராமங்களை இணைக்கின்றன. எங்கு காணினும் பசுமை. இயற்கையின் எழில் பலவிதமான பழமரங்கள் கிடைப்பதற்கரிய ஆபூர்வ மூலிகைகள் மற்றும் தேக்கு போன்ற விலை உயர்ந்த பல வகை மரங்களும் நிறைந்த வளமான மலை! ஆனால் நாங்கள் மூலிகைகள் தேடிச் சென்றதால் பல இடங்களுக்கு வாகன பாதையின்மையால் நடந்துதான் செல்ல வேண்டியிருந்தது. இப்படி நடந்து செல்வதால்- தெய்வீக மூலிகைக் காற்றால் உடலுக்கும் கண் நிறைந்த இயற்கை வளத்தால் மனதிற்கும் முழு நிறைவு கிடைத்தது. பல மைல் தொலைவு மலை ஏறிச் செல்லும் எங்கள் கூட்டத்தை எங்காவது நதிக் கரையிலோ ஓடை பகுதியிலோ- அமரச் சொல்லி ஒய்வெடுக்குமாறு சித்தர் பெருமான் ஆணையிடுவார்கள். மலையேறிய களைப்பால் ஏற்பட்ட கால்வலி, வீட்டு ஞாபகம் எதுவும் அங்கு நம்மை அண்டாது! கற்களை அடுப்பாக்கி காய்ந்த காட்டுச் சுள்ளிகளை விறகாக்கி, சில நண்பர்கள் டீ போடுவார்கள். அந்த தேநீரை அருந்திய உடன்- உடலில் புத்துணர்ச்சி தோன்றும். அந்த ஒய்வுகளின்போது சித்தர் அவர்கள் சில சிறுகதைகளை எங்களுக்கு சொல்வது வழக்கம். அதைக் கேட்கும் அனைவரும் கண்ணபெருமானின் குழலிசை கேட்டும் மயங்கியோர் நிலையில் தம்மை மறந்து இருப்பார்கள். இதனால் அவர்கள் உடல் வாட்டம், அவர்களை விட்டு ஓட்டம் பிடிக்கும். மனம் மகிழச்சியில் திளைக்கும். இது கண்டு மனம் நிறைவுற்ற சித்தர்பெருமான் எங்களை புறப்படச்சொல்லி ஆணையிடுவார். இருட்டும் முன்பு ஒரு நல்ல தங்குமிடத்தை அடைய வேண்டும் என்று எங்களை அவசரப்படுத்தவார். நாங்கள் குருநாதரைத் தொடர்ந்து நடைபயிலத் துவங்குவோம்.



கொல்லிமலை- சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த மலை பச்சைமலைத் தொடர்ச்சியில் இருந்து ஒட்டியவாறு அடிவாரத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் சூழ்ந்தவாறு காட்சியளிக்கிறது. மலையின் உச்சியில் மாசி பெரியண்ண சாமி கோயில் என்னும் சிறியதொரு கோயிலும் அதில் ஆயிரக்கணக்கான சூலங்களும் நம்மை வரவேற்கின்றன. ஏராளமான பக்தர்களின் வழிபாட்டு ஸ்தலமாக இது இருக்கின்றது. இங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் கீழே ஒரு சிறிய ஓடை ஓடுகிறது. அன்று மாலை ஐந்து மணியளவில் அங்கு போய்ச் சேர்ந்தோம். அப்போது குளிர் அதிகமாக இருந்தது. அங்கு அன்று இரவினைக் கழிக்க அந்த இடம் தேர்வு செய்யப்பட்டது. கொண்டு போன சுமைகளை இறக்கி வைத்தோம். யாகம் வளர்க்கத் தீமூட்டி சுற்றி அமர்ந்தோம். ஓய்வெடுக்கத் துவங்கினோம். ஆனால் நாம் நினைப்பதற்கு மாறாக இறைவன் நினைத்து விட்டால் நாம் அதை எதிர்த்து என்ன செய்ய முடியும்?

ஆம்! திடீர் என்று மழை பொழியத் துவங்கியது. மழையில் நனையாமல் ஒதுங்க அங்கு எங்கும் இடமில்லை. நனையக் கூடாத பொருட்களை -ஓரளவு மழையின் பாதிப்பிலிருந்து காப்பாற்ற முனைந்தோம். மழை பெருமழையாகி, பேய் மழையாக உருவெடுத்து பெய்வதைக் கண்டால் இது அடை மழையாகும் போலிருந்து. மேலும் மேலும் அதிகமாக பெய்யத் துவங்கியது! இதைக் கண்ட சித்தர்பெருமான் ஒரு முடிவுக்கு வந்தவராக எல்லோரும் புறப்படுங்கள்! இனி இங்கு தாமதிப்பதில் பொருளில்லை. மேலே உள்ள பெரியண்ண சாமி கோயிருக்குச் சென்று விடலாம் என்று கட்டளையிட அவசர அவசரமாக பொருட்களை எடுத்துக்கொண்டு ஆசானைத் தொடர்ந்தோம். அந்த நிறையிருட்டிலேயே அந்த மலைப் பாதையில் பந்தய வேகத்தில் ஏறினோம். ஆனால், இருளும் அதே வேகத்தில் எங்களைச் சூழ்ந்தது. மழையும் பலமாக தம் கடமையைச் செய்து கொண்டிருந்தது. மழையின் காரணமாக பாதை வழுக்கியது. தோள்களில் சுமை கடுமையாக இருந்தது. இருட்டு பயணமோ மலையின் உச்சியை நோக்கி வழி வழுக்க தட்டுத் தடுமாறி கைவசமிருந்த இரண்டுபேட்டரி டார்ச்சுக்களின் அறைகுறை வழிகாட்டுதலின் உதவியோடு உச்சியை அடைய மூன்று மணிநேரம் மழையோடு கலந்தோடின.

தொடரும்

# இலங்கையில் புத்தரின் வருகைக்கு முன்னர் வாழ்ந்த- இயக்கர், நாகர், தேவர் ஆகிய பழங்குடி மக்கள்

## பாகம் 04

அப்போது இயக்கர்களின் ஒன்று கூடல் கூட்டத்துக்கு புத்தர் சென்றார். அங்கு கூடியிருந்த கூட்டத்தின் நடுவில் அவர்களுடைய தலைக்கு மேலாக பிற்காலத்தில் மஹியங்கான ஸ்தூபி அமைந்த இடத்தில் அவர் வானத்தில் அந்தரத்தில் நின்றார். அப்போது அவர் இயக்கர்கள் மத்தியில் பேய்மழை, புயல், இருள் ஆகியவற்றைத் தோற்றுவித்து அவர்கள் மத்தியில் திகலை உருவாக்கினார்.

திகிலடைந்துபோன இயக்கர்கள் புத்தரை வணங்கித் தங்களை அந்தத் திகிலில் இருந்து விடுவிக்கக் கோரினர். நான் உங்களை திகிலில் இருந்து விடுவிப்பேன் அதற்கு முதல் உங்கள் முழு சம்மதத்துடன் இங்கே நான் உட்காருவதற்கு ஓர் இடம் கொடுங்கள் என்று கேட்டார். இயக்கர்கள், இறைவனே இந்தத் தீவு முழுவதையும் உங்களுக்குக் கையளிக்கிறோம். எங்களை இந்தத் திகிலில் இருந்து காப்பாற்றி ஆறுதல் அளியுங்கள் என்று கூறினார்கள். புத்தர் அவர்களது திகிலைப் போக்கி அருளினார்.


புத்தர், கிரி என்ற அழகான சிறு தீவை வரவழைத்து இயக்கர்களை அவர்கள் வாழ்ந்த இடத்திலிருந்து கிரித் தீவிற்கு அனுப்பி வைத்தார். இதன்பின்னர் தேவர்கள் கூட்டத்தில் புத்தர் தமது தர்மத்தைப் போதித்தார். கோடிக்கணக்கான உயிரினங்கள் மதம் மாறி நிர்வாண நிலை பெற்றனர். சுமன கூடத்தில் வாழ்ந்து வந்த சுமன என்ற தேவர் தலைவனுக்குத் தனது தலைமுடியில் ஒரு பிடி முடியைப் பிடுங்கி அவன் கையில் கொடுத்தார்.

**புத்தரின் இரண்டாவது வருகை**

புத்தரின் இலங்கைக்கான இரண்டாவது வருகை நாகவம்ச அரசர்களான மகோதரனுக்கும் குலோதரனுக்கும் இடையில் மூண்ட போரைத் தீர்த்து வைப்பதற்காக நாகதீபத்திற்குச் சென்றாரெனவும் சொல்லப்படுகிறது.

இந்த இரண்டாவது வருகை புத்தர் ஞானமடைந்து 5 ஆண்டுகள் கழிந்த பின்னர் இடம்பெற்றது. பெயத்தா என்னும் வனத்தில் தங்கியிருந்த புத்தர் மணிகள் பொருந்திய அரியணைக்காக மாமன் முறையான மகோதரனும் மருமகன் முறையான குலோதரனும் தங்கள் படைகளோடு மோதிக் கொள்ள இருந்ததைப் பார்த்து அவர்கள் மீது கருணை கொண்டு சித்திரை மாதம் பௌர்ணமி நாள் விடிகாலையில் தனது பிச்சா பாத்திரம் அங்கிகள் சகிதம் நாகதீபத்திற்குப் பயணமானார். நாகதீபம் நாற்புறமும் கடலால் சூழப்பட்டு 500 யோசனை (ஒரு யோசனை 10 மைல்) தூரம் நீடித்திருந்தது.

நாகதீபத்தை ஆண்ட மகோதரன் என்ற அரசன் தெய்வீக ஆற்றல் படைத்தவனாக இருந்தான். அவனது இளைய சகோதரியை (பிடபிக்கா) தந்த வட்டமான மலையை ஆண்ட நாக அரசனுக்கு மணம் முடித்து வைத்தான்.



அவர்களுக்கு குலோதரன் என்ற மகன் பிறந்தான். குலோதரனின் பாட்டி மணியாசனம் ஒன்றை குலோதரனது தாயாருக்கு கொடுத்துவிட்டு இறந்து விடுகிறாள்.

இப்போது நாகதீபத்தை ஆண்ட மகோதரன் மலையராட்டிர அரசனான குலோதரன் மீது மணியாசனத்தைக் கைப்பற்றிப்பெரும் போர் தொடுக்க ஆயத்தமாகின்றான். இவர்கள் இருவரும் மாமனும் மருமகனுமாவர். இரு படைகளுக்கும் இடையில் கடுமையான போர் தொடங்க இருந்தபோது புத்தர் நடுவானில் எழுந்த நாகர்களைப் பேயிருளில் ஆழ்த்துகிறார். அஞ்சிய நாகர்கள் பிரார்த்தனை செய்தார்கள்.

அதற்குச் செவி சாய்த்த புத்தர் மீண்டும் அங்கு வெளிச்சத்தை உருவாக்கியவுடன் நாகர்கள் புத்தரை வணங்கிப் போருக்குக் காரணமான மணியாசனத்தில் புத்தரையே அமரச் செய்தனர். பின்னர் புத்தருக்கு விண்ணக உணவும் பானமும் கொடுத்து நாக அரசர்கள் உபசரித்தார்கள். புத்தர் 80 கோடி நாகர்களை புத்தசமயத்தை போதித்து முக்தி அடைய வைத்தார்.

இந்தக் கதைகள் சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே ஈழத்தில் நாகர்கள் சிறப்புற ஆட்சி செலுத்தி வந்ததை மகாவம்சம் உறுதி செய்கிறது. இதே கதையை 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மணிமேகலை காப்பியமும் கூறுகிறது.

வேக வெந்திறல் நாகநாட்டரசர்
சினமாசு ஒழித்து மனமாசு தீர்த்
தாங்கு,
அறச் செவி திறந்து, மறச்செவி
அடைத்துப்
பிறவிப்பணி மருத்துவன் இருந்
தறம் உரைக்கும்

மகாவம்சம் குறிப்பிடும் நாகநாடு இன்றைய நயினாதீவு அல்ல. அந்த நாகநாடு 500 யோசனைக்குப் (ஒரு யோசன 10 மைல்) பரந்திருந்தது என்று மகாவம்சம் கூறுகின்றது.

முற்றும்

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

521

## மஞ்சரி தேவி



உதயகிரியை ஆண்டு வந்த பிரதாபசிம்மர் தனது ஆட்சியில் குற்றங்களே நடைபெறக்கூடா தென்று கருதினார். அதனால், சிறிய குற்றமானாலும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதித்தார். பெரிய குற்றங்களுக்கு தயவு, தாட் சண்யம் இன்றி மரண தண்டனை விதித்து வந்தார். அதனால், ராஜ்யத் தில் குற்றங்கள் மிகவும் குறைந்து விட்டன. ஆனால், மக்களின் மனத் தில் நிம்மதி இல்லை.

மன்னரின் ஒரே மகளான மஞ்சரி தேவி அதிரூப சுந்தரியாக இருந்தது மட்டுமன்றி, அறிவிலும் சிறந்து விளங்கினாள். மன்னரின் செல்லப் பெண்ணாக இருந்த அவள், அவரிடம் இருந்து அரசாட்சியின் பல நுணுக் கங்களைத் தெரிந்துகொண்டாள். ஒரு நாள் மன்னர் உடல்நலம் குன்றிப் படுக்கையில் வீழ்ந்தார். அவரைப் பிடித்த நோய் தீராத நோயாகத் தொடர, ஆட்சிப் பொறுப்பை மஞ்சரியிடமே ஒப்படைத்து

**அம்புலிமாமா கதைகள்**

விட்டார். வயதான முதன்மந்திரி பைரவ ரின் துணையுடன் மஞ்சரி ராஜ்யத்தை மிகத் திறமையாக ஆட்சி புரிய ஆரம் பித்தாள். ஒருநர்ள் மன்னர் திடீரென இறந்து போக, மஞ்சரி சிம்மாசனத் தில் அமர்த்தப்பட்டாள்.

தந்தையை இழந்த சோகத்தில் கண் ணீரும் கம்பலையுமாக இருந்த மஞ்சரி பல நாள்கள் ஆட்சியில் கவனமே லெலுத்தவில்லை. அப்போது பைரவர் அவளுக்கு என்று பலவாறும் அறிவுரை கூறி அவளை சமாதானப்படுத் தினார். இதனால் மஞ்சரி பழையபடி நிர்வாகத்தில் கவனம் செலுத்த ஆரம்பித் தாள். ஒருநாள் மஞ்சரி பழையபடி தன் வீரர்களுடன் காட்டில் வேட்டை யாடச் சென்றாள்.

நண்பகலில் ஒரு மானைத் துரத் திக் கொண்டு சென்ற மஞ்சரி, வழி தவறி மற்றவர்களிடமிருந்து பிரிந்து விட்டாள். களைப்பாக இருந்ததால், ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். அப் போது ஒரு வாலீபன் அவள் அருகே இருந்த மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு, அவளைக் கண் கொட்டா மல் பார்த்தான். ஆனால், திடீரென குதிரை வீரர்கள் வரும் ஒலி கேட்டு, அவன் அந்த இடத்தை விட்டு ஓடிவிட் டான்.

அந்த வாலிபன் ஒரு ஓவியன்! அவன் பெயர் முகுந்தன்! மஞ்சரி யின் உடையிலிருந்தும், ஆபரணங் களிலிருந்தும், கம்பீரத்திலிருந்தும் அவள் ஒருராணி என்பது தெரிந்தது. நாடோடியான அந்த ஓவியன், ஒவ்வொரு ஊர்க் கோயிலிலும் தன் மனத் திற்குப் பிடித்த தேவியர்களின் உருவங்



களை வரைவதுண்டு.

உதயகிரி ராஜ்யத்திற்குச் செல்ல காட்டின் வழியே நடந்து கொண்டு இருந்தபோதுதான் அவன் தற்செயலாக மஞ்சரியைப் பார்த்தான். அத்தகைய அழகிய பெண்ணை நேரில் அதுவரை அவன் பார்த்ததில்லை. அதனால் அவளைக் கண்டது முதல் ஓவிய னான அவனது மனம் அவளை ஓவியமாகத் தீட்டி அழகு பார்க்கத் துடித்தது. ஆனால், சில நிமிடங் களே அவளைப் பார்த்ததில் அவள் உருவம் முழுமையாக அவன் மனத்தில் பதியவில்லை. அவளை சித்திரமாக வரைய ஒரு மணி நேர மாவது அவள் எதிரில் நின்று உற்றுப்பார்ப்பது தேவையாக இருந்தது. ஆனால், ராணியான அவளை அவன் எப்படி வெகு நேரம் உற்றுப்பார்க்கமுடியும்?


உதயகிரியைச் சென்றடைந்த முகுந்தன் பைத்தியம் பிடித்தவன் போல் நிலை கொள்ளாமல் தவித்தான். மஞ்சரியை அருகில் நின்று ரசிக்கா மல் உதயகிரியை விட்டுச் செல்வதில்லை என்று உறுதி கொண்ட முகுந்தன் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந் தான். அந்த அரிய வாய்ப்பு விரைவி லேயே கிட்டியது. ராணி மஞ்சரி மீண்டும் வேட்டைக்குப் போகிறாள் என்றும், இந்தமுறை இரவில் காட்டி லேயே கூடாரம் அடித்துத் தங்குவாள் என்று கேள்விப்பட்டதும், முகுந்தன் மிகுந்த ஆ[illegible] சென்றான்.

ராணியின் வீரர்கள் கூடாரமடிக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அந்த இடத்திலேயே மரங்களுக்குப் பின் ஒளிந்து கொண்டான். வேட்டையாடிய பிறகு மஞ்சரி மாலையில் தன் வீரர் களுடனும்,தோழிகளுடனும் கூடாரத் திற்கு வந்தாள்.

அவளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தனியான கூடாரத்திற்குள் சென்று உறங் கத் தொடங்கினாள். நடு இரவுவரை காத்திருந்த முகுந்தன், மஞ்சரியின் கூடாரத் தைக் காவல்காக்கும் வீரர்கள் சற்றே கண் அயர்ந்ததும் சத்தமின்றி அவளு டைய கூடாரத்திற்குள் நுழைந்தான். மிக ஒயிலுடன் சயனித்திருந்த மஞ்சரியின் அழகை நன்கு கண்டு மனத்திரையில் பதித்துக்கொண்டான். பிறகு மெதுவாக கூடாரத்தை விட்டு வெளியேறும் போது, ஒரு காவலன் முகுந்தனை கையும் களவுமாய்ப் பிடித்தான். ராணியின் கூடாரத்தினுள் அத்துமீறி நுழைந்ததற்காக முகுந்தன் கைது செய்யப் பட்டான்.

மறுநாள் சபையில் முகுந்தன் மஞ்சரி முன் நிறுத் தப்பட்டான். அந்த சமயம் மந்திரி பைரவர் இல்லை. முகுந்தன் அயல் நாட்டு ஒற் றன் என்றும், தீய எண்ணத் தோடு ராணியின் படுக்கைய றையில் நுழைந்தான் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

“மகாரணி! தயவு செய்து நான் சொல்வதை நம்புங் கள்! நான் ஒற்றன் அல்ல! நான் ஒரு ஓவியன்! உங்களை முதன் முதலாகப் பார்த்த நாள் முதல் உங்களை சித்திரம் வரையத்துடித்துக் கொண் டிருக்கிறேன். கவனமாக உங்களை உற்றுப் பார்ப்பதற்காகவே நான் உங்கள் கூடாரத் தில் நுழைந்தேன்” என்று முகுந்தன்



மன்றாடினான்.

ஆனால், ராணியின் படுக்கை அறை யில் நுழைவது மிகப் பெரிய குற்றம் என்றும், அதற்கு தூக்குத் தண்டனையே சரியாகும் என்று பலரும் சபையில் கருத்துத் தெரிவித்தனர். ஆகையால் மஞ்சரியும் அனுமதியின்றி என் படுக்கை அறையில் நுழைந்த மாபெரும் குற்றத்திற்காக முகுந்தனுக்கு மரண தண்டனை அளிக்கிறேன். நாளைக் காலை அவனைத் தூக்கில் இட வேண்டும்” என்று நீதி வழங்கினாள்.


மகாராணி! நான் செய்தது தவறு தான்! ஆனால், மரணதண்டனை பெறுபவர்களின் இறுதி விருப் பத்தை நிறைவேற்றுவது உங்கள் கடமை! அதன்படி எனக்கு இன்னும் ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள். அதற்குள் உங்கள் ஓவியத்தை வரைந்து விடுவேன்” என்றான் முகுந்தன்.

அதற்கு மஞ்சரி, “சரி! அடுத்த வெள்ளிக்கிழமை வரை உனக்கு அவ காசம் தருகிறேன். அதற்குள் உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள். சனிக்கிழமை காலை உன் தண்டனை நிறைவேற்றப்படும்!” என்றாள்.

முகுந்தன் ஓவியம் வரைவதற் கான ஏற்பாடுகள் அரண்மனையி லேயே செய்து தரப்பட்டன. இரவும் பகலுமாகப் பாடுபட்டு முகுந்தன் வெள்ளிக்கிழமை இரவு ஓவியத்தை வரைந்து முடித்தான். அதை மஞ்ச்ரிக்கு வெகுமதியாக அளித்து விட்டு, தன் மரணத்தை எதிநோக்கிக் காத்திருந்தான்.

மறுநாள் காலை தனது ஓவியத் தைப் பார்த்த மஞ்சரி அப்படியே பிரமித்துப்போனாள். இத்தகைய அற்புதமான கலைஞனுக்கா மரண தண்டனை அளித்தோம் என்று பதை பதைத்துப் போய் உடனே தண்ட னையை ரத்து செய்தாள். முகுந்த னும் உயிர் தப்பினான். பிறகு முகுந் தன் சபைக்கு அழைத்துவரப்பட் டான். அதற்குள் அயலூர் சென்றிருந்த மந்திரி பைரவரும் ஊர் திரும்பிவிட் டார். நடந்த விடயத்தைக் கேள்விப் பட்ட அவர் உடனே மஞ்சரியை சந் தித்து “நல்லவேளை மரண தண்ட னையை ரத்து செய்தாய்! உன் தந்தை காலத்தில் இருந்தே எனக்கு மரண தண்டனையில் உடன்பாடில்லை. எந்தப் பெரிய குற்றம் இழைத்த மனிதனுக்கும் திருந்த ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். உயிர் கொடுக் கும் இறைவனுக்கு மட்டுமே அதைப் பறிக்கும் உரிமை உண்டு. நமக்கு இல்லை!” என்றார்.

“ஆம், மந்திரியாரே! நீங்கள் சொல்வதும் சரிதான். இனி, நம் இராஜ்யத்தில் மரண தண்டனையை நிரந்தரமாக ரத்து செய்யப்போ கிறேன்” என்றாள் மஞ்சரி. சபையோர் கைதட்டி அவளுடைய தீர்மானத்தை வரவேற்றனர். தொடர்ந்து “அத்து டன் முகுந்தனை நமது ஆஸ்தான ஓவியனாக நியமிக்கிறேன்!” என்று



மஞ்சரி பிரகடனம் செய்ய, கர கோஷம் விண்ணைப்பிளந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடுத்த மாதம் 'தலைவா'

விஜய் நடிப்பில் வெளிவர இருக்கும் "தலைவா" படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. அடுத்த மாதம் 9 அல்லது 15ஆம் திகதியா என்பதை வேந்தர் மூவிஸ் நிறுவனம் இன்னும் முடிவு செய்ய வில்லை.

"தலைவா" படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது படுதீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் படத்திற்கு "U" சான்றிதழ் அளித்து இருக்கிறார்கள் என்று வதந்தி பரவியது. இத்தகவல் பொய்யானது என்றும், இம்மாத இறுதியில் தான் படத்தினை சென்சார் அதிகாரிக ளுக்கு அனுப்ப இருக்கிறோம் என்றும் அறிவித்தது படக்குழு.

இந்நிலையில் படத்தினைப் பற்றிய புதுத்தகவல் ஒன்று கிடைத்திருக்கிறது. "தலைவா" படத்தில் ஒரு பாடலுக்கு விஜய், அமலா பால் பங்குபெறும் ROPE DANCE இடம்பெறுகிறதாம்.

இப்பாடலை அவுஸ்திரேலியாவில் படமாக்கி இருக்கிறார்கள். தமிழ் சினிமாவிற்கு இந்த டான்ஸ் புதுமையாக இருக்குமாம். ROPE DANCE புதுமை யானது என்பதால் விஜய், அமலாபால் இருவருமே பெரும் சிரமப்பட்டு ஆடியிருக்கிறார்கள்.

## 'நயன்' காட்டில் பணமழை

தமிழில் சரத்குமாருக்கு ஜோடியாக ஐயா படத்தின் மூலம் அறிமுகமானவர் நயன்தரா, ரஜினி, சூர்யா, விஜய், அஜித், சிம்பு, தனுஷ் என முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து நடித்துவிட்டார். அதுமட்டுமல்லாமல், தெலுங்கு மற்றும் மலையாளத்திலும் கூட இவருடைய மார்க்கெட் உச்சத்தில்தான் இருக்கிறது.

இந்நிலையில் தனது சம்பளத்தையும் அதிரடி யாக உயர்த்தி விட்டாராம் நயன்தாரா.

இது கதிர்வேலன் காதல் படத்தில் நடிப்பதற்கு 1 கோடியே 20 இலட்ச ரூபாய் சம்பளம் வாங்கி இருக் கிறாராம்.

இந்நிலையில் ஜெயம் ராஜா இயக்கத்தில், ஜெயம ரவிக்கு ஜோடியாக நடிக்க உள்ளார். இந்த படத்தில் நடிப்பதற்காக ஒன்றரை கோடி ரூபாய் சம்பளம் வேண்டும் என்று கேட்டுள்ளாராம்.

கண்ணதாசன் என்ற கவியரசருக்கு சற்றே இணை யாக நெடுந்தூரம் நடந்து வந்த சிறப்பும் வாலிக்கே உள்ளது என புகழாரம் சூட்டியுள்ளார் கவிப்பேரரசு வைர முத்து. வாலியின் மறைவு குறித்து அவர் வெளியிட் டுள்ள இரங்கல் அறிக்கையிலே இவ்வாறு தெரிவித் துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

தமிழகத்தின் முதுபெரும் பாடலாசிரியர் காவியக் கவிஞர் வாலியின் மறைவு பாட்டுலகில் இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது. அழைத்த போதெல்லாம் அன்பாக பேசிமகிழ்ந்த ஒரு மூத்த நண் பரை நான் இழந்துவிட்டேன்.

வாலி பெற்ற சில பெருமைகள் எந்தப் பாடலாசிரிய ருக்கும் எளிதில் வாய்க்காதவை. இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் பாடல் எழுதிய பாடலாசிரியர் வாலி யாகத்தான் இருக்கமுடியும். எம்.ஜி.ஆர். - சிவாஜி தொடங்கி நடித்துக்கொண்டிருக்கும் நான்காம் தலைமுறை வரைக்கும் பாட்டெழுதிய பெருமை அவருக்கு உண்டு.

கண்ணதாசன் என்ற கவியரசருக்கு சற்றே இணை யாக நெடுந்தூரம் நடந்துவந்த சிறப்பும் வாலிக்கே உள்ளது. எஸ்.எம்.சுப்பையா நாயுடு முதல் ஏ.ஆர். ரகு மான் வரை எத்தனையோ இசையமைப்பாளர்க ளுக்கு வரிகளால் வலிமை சேர்த்தார்.

திராவிட இயக்க அரசியலை சாகித்தியத்தில் கொண்டு வந்த சாமர்த்தியம் வாலிக்கு வசப்பட்டிருந்தது. "மூன் றெழுத்தில் என் மூச்சிருக்கும்" என்று எம்.ஜி.ஆருக்கு எழுதியவர், கலைஞரின் மைந்தர் மு.க.முத்துவுக்கு மூன்று தமிழ் தோன்றியதும் உன்னிடமோ, நீ மூவேந தர் வழி வந்த மன்னவனோ" என்று எழுதினார்.

மூன்று என்று தொடங்கும் பல்லவியை இரண்டு பேருக்கும் பயன்படுத்தி இரு சாராரின் மனம் கவர்ந்த திறமை வாலிக்கு மட்டுமே வரும் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசாதவர், தான் உண்டு தன் தமிழ் உண்டு என்று வாழ்ந்தவர்.




**'கண்ணதாசன் என்ற கவியரசருக்கு சற்றே இணையாக நெடுந்தூரம் நடந்து வந்த சிறப்பும் வாலிக்கே உள்ளது'**

*- கவிப்பேரரசு வைரமுத்து*

வாழ்வின் நிறைவுக்காலத்தில் நோய்களை சந்தித்தாலும் நொந்து கொள்ளாதவர். தாய்கொண்டு வந்ததை தாலாட்டி வைத்ததை 'நோய்கொண்டு போகும் காலம் அம்மா" என்று எழுதிய வாலி தன் வரி களையே தனக்கு இரங்கல் பாடலாக்கி இறந்து விட்டார்.

அவர் உயிர் பிரிந்திருக்கலாம் உடலை ஐம்பூதங் கள் பிரித்துக் கொண்டிருக்கலாம். அவர் தமிழ் மர ணம் தொடமுடியாத உயரத்தில் இருக்கிறது. அது கால மெல்லாம் அவர் புகழைப் பாடிக்கொண்டிருக்கும். இறங்கும் கண்ணீரை துடைத்து கொண்டு என் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கவிஞர் வைரமுத்து கூறியுள்ளார்.

## சந்தானத்தால் பாதிக்கப்பட்ட சந்தியா



யா யா படத்தில் சந்தானம் தனது இடுப்பில் கிள்ளியதை நினைத்து நினைத்து புலம்புகிறாராம் சந்தியா. சந்தியாவின் மார்க்கெட் சரிந்துவிட்ட தையடுத்து அவர் யா யா படத்தில் காமெடி சந்தானத்தின் ஜோடியாக நடித்துள்ளார்.

படத்தில் ஹீரோ ரேஞ்சுக்கு சந்தானத்திற்கும் காதல், ரொமான்ஸ், கொஞ்சல் காட்சிகளாம். காமெடி சந்தானம் என் இடுப்பை கிள்ளிவிட்டாரே எனப் புலம்பித் தள்ளும் சந்தியா சில காட்சிகளில் சந்தானம் சந்தியாவின் இடுப்பை கிள்ளுவது, முத்தம் கொடுப்பது என்று ரொம்பவே ரொமான் டிக்காக நடித்துள்ளாராம். இப்படி காமெடி நடிகரோடு முத்த காட்சியில் நடித்துவிட்டோமே என்று சந்தியா நொந்து கொண்டிருக்கிறாராம்.

மேலும் இதுவரை ஹீரோக்கள் கூட கிள்ளாத தனது இடுப்பை சந்தா னம் கிள்ளிவிட்டதை நினைத்தால் அவரால் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லையாம். இனியும் இங்கிருந்தால் நம்ம இமேஜ் டேமேஜ் ஆகிவிடும் என்று நினைத்த அவர் மலையாள படங்களில் நடிக்க சொந்த மாநிலமான கேரளாவுக்கு கிளம்பிவிட்டாராம்.,

## பொங்கலுக்கு அஜித், விஜய் படங்கள்

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித் நடிக்கிற 53ஆவது படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் முடிவடைந்து வெளியாகும் நிலையில் உள்ளது.

இன்னமும் பெயரிப்படாத இப்படத்தில் ஆர்யா, நயன்தாரா ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு பின்பு தற்போது 54ஆவது படமாக சிறுத்தை சிவா இயக்கத்தில் நடித்து வருகிறார் அஜித். விஜயா புரொடக் ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் அஜித் குமார் ஜோடியாக தமன்னா நடித்து வருகிறார்.மேலும் சந்தானம், பாலா, விதார்த், 'நாடோடிகள்' அபிநயா, ரமேஷ் கண்ணா, இளவரசு, அப்புக்குட்டி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு பெரும்பகுதி முடிவடைந்துவிட்டதால், வரும் பொங்கலன்று வெளியிட முடிவு செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. இதேபோல், விஜய் தற்போது நடித்து முடித்துள்ள 'தலைவா' படம் அடுத்த மாதம் வெளியாகிறது. இதையடுத்து நேசன் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் ஜில்லா படமும் பொங்கலுக்கு வெளியாவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பொங்கல் நாளில் 'தல'-'தளபதி'ஆகியோரின் படங்கள் ஒரே நேரத்தில் வெளியாவது ரசிகர்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, அடுத்த வருட பொங்கல் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு ஒரு மிகப்பெரிய விருந்தாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைகின்றனர் இசை ஜாம்பவான்கள்

இந்திய சினிமாவின் இசை ஜாம்பவான்களாக திகழும் இளையராஜா வையும், ரகும்ானையும் இணைத்து, ஒரு பாடலுக்கு இசையமைக்க வைக்கும் முயற்சி நடக்கிறது.தென்னிந்திய சினிமா வர்த்தக சபையின் சார்பாக நடக்கவுள்ள, இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழா கொண் டாட்டத்தின் சிறப்பு அம்சமாக, ஒரு பாடல் இடம் பெறுகிறதாம். அந்த பாடலுக்கு, அவர்கள் இருவரையும் சேர்த்து இசையமைக்க வைக்கும் முயற்சி நடக்கிறது.





நடிகர் : சிவகார்த்திகேயன்
நடிகை : ஸ்ரீ திவ்யா
இயக்குநர் : பொன்ராம்

படம்: வருத்தப்படாத வாலிபர் சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தகயா குண்டுவெடிப்பு

அண்மையில் இந்தியாவின் பீஹார் மாநிலத்திலுள்ள புத்தகயாவில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்கள், இந்தியாவுக்கு பெரும் அதிர்ச்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாக கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சு, இந்தியத் தூதரிடம் இது தொடர்பாக அறிக்கை கோருமளவுக்கு இந்தச் சம்பவம் சிங்கள தேசத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்பதை, கிடைக்கக்கூடிய தகவல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

புத்தர் ஞானம்பெற்றதாகக் கூறப்படும் போதிமரம் அமைந்துள்ள, இந்த வளாகத்தில் ஐம்பத்தியொரு நாடுகளின் விகாரைகளும் மடாலயங்களும் உள்ளன. அவ்வளவு தூரம் இந்த வளாகம் பௌத்த சமூகத்துக்கான ஒரு சர்வதேச மையமாகத் திகழ்ந்து வருகிறது.



வருடம் தோறும் பல்வேறு நாடுகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான பௌத்த மக்களும் உல்லாசப் பயணிகளும் அங்கு சென்று வருவதால், இந்தியாவுக்கு அந்நியச் செலவாணியை பெற்றுக் கொடுப்பதிலும் இவ்விடம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது.

இப்படியான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் அமைந்துள்ள நேபாள நாட்டின் விகாரையில் 4 குண்டுகளும், திபெத் நாட்டு விகாரைக்கு அருகில் நான்கு குண்டுகளும் வளாகத்துக்கு வெளியே முகப்பில் அமைந்துள்ள 90 அடி உயரமான புத்தர் சிலையின் பின்புறமாக ஒரு குண்டும் என 9 குண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாகத் தடயவியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குண்டுகள் வெடிக்கப்பட்டமை தொடர்பாக தடயவியல் நிபுணர்கள், கோயிலில். தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர். இதே வேளை, விகாரைகளுக்கோ மடாலயங்களுக்கோ எவ்வித சேதமும் எற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.







மேலும் மூன்றாவது நாளே வளாகம் மீண்டும் யாத்திரிகர்களுக்காகத் திறந்து விடப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவும், பீஹார் மாநில காவல்துறையும் பல முனைகளிலும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில ஊடகங்களில் கைது செய்யப்பட்டவர், முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்தவர் என்ற ஊகங்கள் வெளியான போதும், இதுவரை, உத்தியோகபூர்வமாக அது உறுதி செய்யப்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவமானது, இலங்கை அரசும், கடும் போக்குச் சிங்கள பௌத்த அமைப்புகளும் அரசியலமைப்பின் 13 -வது திருத்தச் சட்டத்தை இல்லாமற் செய்ய அல்லது பலவீனப்படுத்த எடுத்துவரும் முயற்சிகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டது என ஒரு சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பு, கருத்து வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மீள்பார்வை

ஆயினும், இந்திய அரசுக்கெதிராக முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளால் இந்தியாவின் மும்பை உட்பட பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக அல்லது இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளின் பௌத்த மத வெறியர்களால், முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடிய வன்முறைகளுக்கு இது பதிலடியாக இருக்கலாம் என்று ஒருசாரார் தெரிவித்திருந்தனர்.

இலங்கையில் இதுவரை சிங்கள பௌத்த வெறியர்களான பொது பலசேனா, சிங்கள ராவய, ஜாதிக ஹெல உறுமய, இராவணா அமைப்பு போன்ற அரச அனுசரணை பெற்ற அமைப்புகளால் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றது.

அனுராதபுரத்திலிருந்த, 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த முஸ்லிம் தர்க்கா இடிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து, இதுவரை பதினாறு பள்ளிவாசல்கள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

கிராண்ட்பாஸ், தெஹிவளை ஆகிய இடங்களில் அமைந்திருந்த பள்ளிவாசல்கள் மூடபட்டன. முஸ்லிம் மக்களின் புனித நூலான குர்ஆன் வீதியில் தூக்கி வீசப்பட்டது. மசூதியில் பலவந்தமாக உட்புகுந்த பிக்குகள் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை விரட்டிவிட்டு பிரித் ஓதினார்கள். முஸ்லிம்களின் ஹலால் சான்றிதழ் முறை தடுத்து நிறுத்தப்பட்டது. தற்சமயம் இறைச்சிக்காக மாடு வெட்டுவதற்கு எதிராகவும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு, மியன்மார் மற்றும் சீன தேசத்தல் கூட அடிக்கடி முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தவகையில் முஸ்லிம்கள் மேல் நடத்தப்படும் கொடிய வன்முறைக்ளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவும் எச்சரிக்கை செய்யும் விதமாகவும் புத்தகயாவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் கருத்து வெளியிடுகின்றார்தள். வெடித்த குண்டுகளை அடிப்படையாக வைத்து பார்க்கும்போது, இது இஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் சதி வேலையாக இருக்கலாம் என்றும் முஸ்லிம் தீவிரவாதிகளே தாக்குதல் நடத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில், இத்தாக்குதலுடன் பௌத்த பிக்கு களுக்கு தொடர்பு உள்ளது என இந்திய றோ அமைப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

குறித்த குண்டுவெடிப்புக்கள் எத்தனையோ சர்ச்சைகளை உருவாக்கியுள்ள நிலையில் எதிர்பாராத திருப்பமாக இது அமைந்துள்ளது.

மகாபோதி புத்தர் கோயிலை நிர்வகிப்பது யார் என்பதில் பௌத்த பிக்குகளிடையே கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக கோயிலின் உள்ளே இருக்கும் பௌத்த பிக்குகளே, குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் குண்டுவெடிப்பு தொடர்பாக பலரிடம் விசாரணை நடத்திய இந்தியத் தேசிய புலனாய்வு அமைப்பு, தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும், ஒரு நபரின் வரைபடத்தை தற்போது வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடந்து 9 நாட்களுக்குப் பிறகு முதல்முறையாக வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அகிம்சை போதித்து போதிஞானம் பெற்ற புத்தரின் புனித இடத்தினுள்ளேயே குண்டுவைக்கத் துணிந்துள்ள இத்தகைய நடவடிக்கையானது, மானுட சமுதாயத்தின் *மனிதம்* சிதைவடைந்து செல்வது தீவிரமடைந்திருப்பதையும், அதனால் அது, தன்னைத்தானே வேரறுக்கும் காலகட்டத்திற்குள் சென்றுகொண்டிருக்கிறது என்பதையுமே நிரூபிக்கிறது. வரலாற்றின் முந்தைய பக்கங்களில் மானுட சமுதாயத்தின் உளச் செம்மையாக்கலுக்கு உகந்ததாக இருந்து வந்த ஆன்மிகப் பாதைகள், இன்றைய காலகட்டத்தில் உருக்குலைக்கப்படுவதன் முழு விழைவையும் எதிர்நோக்கப்போவது அடுத்த சந்ததியே.

-தொகுப்பு: சாருகன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி வெளிநாட்டு பணியாளர்களுக்கு புதிய விதிமுறைகள் அறிமுகமாகின

(கொழும்பு)

**வெளிநாட்டுப் பணியாளர்களுக்கென உரிமைகள் சிலவற்றை வழங்குவதற்கான புதிய விதிமுறைகளைக் கடந்த செவ்வாயன்று சவுதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ளது. அந்நாட்டவர் இஸ்லாம் மதத்தை மதித்து நடப்பதுடன் தங்களின் வேலை கொள்வோருக்கு கீழ்ப்படிந்து ஒழுக வேண்டுமெனவும் அது வலியுறுத்தியுள்ளது.**

இதுகுறித்துசவுதிதொழில்அமைச்சர் ஆதில் ஃபாகிஹ் தெரிவிக்கையில்,

வீட்டுப் பணிப் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் மதித்து நடப்பதுடன் வேலை ஒப்பந்தப்படி அமைந்த பணிகளைச் செய்விப்பது சம்பந்தமாக வேலை கொள்வோருக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் கீழ்ப்படிந்து ஒழுகவும் வேண்டும்.

வீட்டுப்பணியாளரொருவர்போதிய காரணமின்றி பணியொன்றை நிராகரிக்கவோ அல்லது வேலையொன்றை விட்டுச் செல்லவோ உரிமையற்றவர்.

ஆயினும் புதிய விதிமுறைகளின் பிரகாரம், தங்களின் ஒப்பந்தங்களின் மூலம் பணியாளர்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட வேதனக்கொடுப்பனவுகள்மற்றும்ஏனைய உரிமைகளை வேலை கொள்வோர் உரியவாறு வழங்க வேண்டும்.

வேலை கொள்வோர் ஒத்துக் கொண்ட மாதாந்த சம்பளத்தை பணியாளர்களுக்குத் தாமதமின்றி வழங்குவதுடன் அவர்களுக்கு வாரத்தில் ஒருநாள் விரும்பும் பொருத்தமான இருப்பிட வசதிகளும்அவர்கள் இளைப்பாறும்பொருட்டு நாளாந்தம் ஆகக் குறைந்தது ஒன்பது மணித்தியால ஓய்வும் வழங்க வேண்டும்.

இத்தகைய புதிய வழிமுறைகளின் கீழ் பணியாளர்கள் இரண்டு வருட கால சேவையின் பின்னர் சுகவீன விடுப்பு மற்றும் ஒரு மாத கால சம்பளத்துடனான பருவ விடுமுறை மற்றும் நான்கு வருடகால சேவையின் பின்னர் ஒருமாத கால சம்பளத் தொகைக்குச் சமனான சேவையின் முடிவிலான ஈட்டுத் தொகை ஆகியவற்றை பெற்றுக் கொள்ள உரித்துடையவராவார்.

தனது வீட்டு எஜமானின் குழந்தையைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச்சேர்ந்த வீட்டுப் பணிப் பெண்ணான ரிஸானா நபீக்கை அமெரிக்க ஆதரவு பெற்ற சவுதி அரேபிய அரசு சிரச்சேதம் செய்ததை அடுத்து வெளிநாட்டு வீட்டுப் பணியாளர்களை நடத்தும் விதம் குறித்து இந்த வருட முற்பகுதியில் சவுதி அரேபியா சர்வதேசத்திடமிருந்து வசைப்பெயர்களை வாங்கியிருந்தது.

மனித உரிமைகள் காப்பகம் இது குறித்து வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில்,

சவுதி அதிகாரிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வைக்கவென ரிஸானாவை சிறையில் பூட்டி வைத்தனர் எனக் குற்றம் சுமத்தியிருந்தது.

மேலும் சவுதி அரேபியாவில் பணியாற்றி வரும் சுமார் எட்டு மில்லியன் வெளிநாட்டுப் பணியாளர்களில் அதிகமானோர் தெற்காசியாவைச் சேர்ந்தவர்களென தெரியவருகின்றது. (அ-2)

# அமைச்சர்களின் புதல்வர்களுக்கும் தேர்தலுக்கான நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

இலங்கையின் 7 அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் புதல்வர்களும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்துள்ளனர்.

இப் பரீட்சை நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இப் பரீட்சைக்கு மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களுக்காக பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் மகன், அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, நந்தமித்ர ஏக்கநாயக்க ஆகியோரின் மகன்மார் ஆகியோர் மத்திய மாகாண சபைத் தேர்தல் தெரிவுக்காக சென்றிருந்தனர்.

அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜயரத்ன ஹேரத் பந்துல பஸ்நாயக்க ஆகியோரின் மகன்மாரும் வடமேல் மாகாண சபை வேட்பாளர் நேர்முகத்துக்காக சென்றிருந்தனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.07 21

- ✷ கிமு 356 - ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றான கிரேக்கக் கோயில் ஆர்ட்டெமிஸ் கோயில் தீவைத்துக் கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டது.
- ✷ 1545 - ஆங்கிலக் கால்வாயில் வைட் தீவில் முதற்தடவையாக பிரெஞ்சுப் படைகள் தரையிறங்கின.
- ✷ 1718 - ஒட்டோமான் பேரரசுக்கும் வெனிஸ் குடியரசுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது.
- ✷ 1774 - ரஷ்யாவும் ஒட்டோமான் பேரரசும் தமது ஏழு ஆண்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.
- ✷ 1831 - பெல்ஜியத்தின் முதலாவது மன்னர் லெப்பால்ட் ஐ முடி சூடிய நாள்.
- ✷ 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவில் மனாசஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற முக்கியமான போரில் கூட்டமைப்பு அணி வெற்றி பெற்றது.
- ✷ 1954 -ஜெனீவா மாநாட்டில் வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- ✷ 1961 - நாசாவின் மனிதரை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தில் இரண்டாவது பயணம் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 4. கஸ் கிரிசம் என்பவர் விண்வெளிக்குப் பயணித்தார்.
- ✷ 1969 - நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் அப்பல்லோ 11 விண்கலத்தில் சென்று சந்திரனில் நடந்த முதல் மனிதர் என்ற புகழைப் பெற்றனர்.
- ✷ 2007- ஹரி பொட்டர் தொடர் நாவலின் கடைசிப் பாகம் வெளிவந்தது.

**பிறப்பு**

- ✷ 1899-ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, அமெரிக்க எழுத்தாளர் (இ. 1961)

**இறப்புகள்**

- ✷ 1899 - சாரதா தேவி, ஆன்மீகவாதி, சுவாமி இராமகிருஷ்ணரின் மனைவி (பி. 1853)
- ✷ 1926 - ஃபிரெடெரிக் ஹன்டர் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர். (பி. 1886)
- ✷ **1998 - அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் (பி. 1923)**
- ✷ 2001 - சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (பி. 1927)
- ✷ 2010-டேவிட் வாரன், கறுப்பு பெட்டியை கண்டுபிடித்தவர்.

### அலன் ஷெப்பர்ட்



அலன் பார்ட்லெட் ஷெப்பர்ட் 1923 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி பிறந்த இவர் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆவார். முதன்முதலாக மே 5, 1961 இல் மேர்க்குரி விண்கலத்தில் பயணம் செய்து மொத்தம் 15 நிமிடங்கள் பூமியின் சுற்று வட்டத்தில் சுற்றித் திரும்பினார். பின்னர் 1971 இல் தனது 47ஆவது அகவையில் அப்பல்லோ 14 விண்கலத்தில் சந்திரனுக்கு சென்று சந்திரனில் நடந்த 4 ஆவது மனிதர் ஆனார்.

1959 இல் புதிதாக உருவாக்கப்பட்ட நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தினால் விண்வெளிப் பயிற்சிக்காக அழைக்கப்பட்ட 110 பயிற்சி விமானிகளுள் இவரும் ஒருவராவார். மிகவும் கடினமான பயிற்சிகளின் பின்னர் மேர்க்குரி திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட ஏழு விண்வெளி வீரர்களுள் இவரும் ஒருவர்.

1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி சோவியத் விண்வெளி வீரர் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றார்.

1961 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி அலன் ஷெப்பர்ட் மேர்க்குரித் திட்டத்தின் கீழ் ஃப்றீடம் 7 (Freedom 7) என்ற விண்கலத்தில் 116 மைல்கள் (statute miles) தூரத்திற்கு சென்றார்.

அப்பல்லோ 14 இல் சந்திரனுக்கு சென்ற அலன் ஷெப்பர்ட் அங்கு அமெரிக்கக் கொடியை நாட்டினார்.

தனது 47ஆவது வயதில் ஷெப்பர்ட் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை அப்பல்லோ 14 இல் 1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி சென்றார். இதுவே வெற்றிகரமாக சந்திரனில் தரையிறங்கிய மூன்றாவது அமெரிக்கத் திட்டமாகும். 1974 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி இவர் நாசாவில் இருந்தும் கடற்படையில் இருந்தும் ஓய்வு பெற்றார்.

# 17 பல்கலைக்கழகங்களிலும் 60 விடுதிகள் அமைக்க முடிபு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் நன்மை கருதி பல்கலைக்கழகங்களுக்கு 60 மாணவர் விடுதிகளை (ஹொஸ்டல்கள்) அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக வெகுசன ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதிலுமுள்ள 17 பல்கலைக்கழகங்களில் இந்த 60 விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

பௌத்த பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 17 பல்கலைக்கழகங்களிலும் 92 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கான தங்குமிட வசதிகள் தற்போதும் பற்றாக்குறையாகவுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் புதிய விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் 60 பல்கலைக்கழக மாணவர் விடுதிகளும் நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட சகல வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ளன. இவற்றை இரண்டு கட்டங்களாகப் பிரித்து இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

ஒவ்வொரு விடுதியும் நான்கு மாடிகளையும் 100 அறைகளையும் கொண்டவையாக அமைக்கப்படவுள்ளன. ஒரு விடுதியில் 200 மாணவர்களைத் தங்கவைக்க முடியும். இதனால் 12 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்கள் நன்மை அடையவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து தென்னிலங்கை கட்சிகள் வடக்கிலும் போட்டியிட முடிவு

(கொழும்பு)

**மூன்று மாகாணசபை தேர்தல்களிலும் அரசை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பிலுள்ள கட்சிகளில் 5 கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

மேற்படி அமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குத் தேர்த லில் போட்டியிடுகின்ற அதேவேளை, அதற்கு ஆதரவு வழங்க ஜனநாயக மக்கள் முன்னணியும் தீர்மானித்துள்ளது.

அத்துடன், மத்திய மாகாணத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிடுவதற்கும் ஜனநாயக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

இந் நிலையிலே அதிகாரப் பகிர்வுக்கான கூட்டில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளான அசாத் சாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி, கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி, சிறிதுங்க ஜயசூரிய தலைமையிலான ஐக்கிய சோஷலிசக் கட்சி, சரத் மனமேந்திர தலைமையிலான புதிய சிஹல உறுமய, அப்பு ஆராச்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சி முதலான 5 கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள வடக்கு, வடமேல், மத்திய முதலான மூன்று மாவட்ட தேர்தல்களிலும் போட்டியிடுவதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக குறித்த 5 கட்சிகளின் தலைவர்கள் பேச்சு நடத்திவருகின்றனர்.

மேலும், மூன்று மாகாணசபைகளிலும் வேட்பாளர்களைக் களமிறக்குவது குறித்தும் ஆராய்ந்து வருவதுடன், தேர்தல் பிரசார நடவடிக்கைகளை எந்த அடிப்படையில் முன்னெடுக்கலாம் என்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர். இதனை நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன உறுதிப்படுத்தினார்.

அதிகாரப் பகிர்வுக்கான கூட்டில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி முதலான கட்சிகள் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததையடுத்தே ஏனைய கட்சிகளால் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கசினோ வர்த்தகர்களுக்கு அரசு வரிச்சலுகை வழங்குகிறது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபல கசினோ வர்த்தகரான ஜேம்ஸ் பெக்கரின் கசினோ வர்த்தகத்திற்கு 10 வருடங்களுக்கு வரிச்சலுகை வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கலந்து கொண்ட போதே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கசினோ வர்த்தகத்திற்கு வரிச்சலுகை வழங்கும் முதல் நாடு இலங்கையாகும். வரிச்சலுகையை வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் இரவு வெளியிடப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக கசினோ வர்த்தகத்திற்கு வரிச்சலுகை வழங்கும் முதல் நாடு என்ற கின்னஸ் சாதனையை இலங்கை படைத்துள்ளது.

சாதாரண மக்கள் மீது வரிக்கு மேல் வரியை சுமத்தி வரும் அரசாங்கம், கசினோ வர்த்தகர்களுக்கு மட்டும் வரிச்சலுகையை வழங்கியுள்ளது. தேசிய பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வரிச்சலுகை வழங்காது, உலகில் உள்ள மிகப் பெரிய வர்த்தகர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படுகிறது. (அ-2)

## பலரை பதம் பார்த்தது கட்டாக்காலி நாய்

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலியாக திரியும் நாயொன்று நோயாளர்களை பார்வையிட வந்த நான்கு பேரை கடந்த மூன்று தினங்களுக்குள் கடிதத்தில் காயமடைந்த நான்கு நபர்களும் சிகிச்சை பெற்று சென்றுள்ளனர்.

இக் கட்டாக்காலி நாய் குட்டி ஈன்று இருப்பதாலேயே கோபம் கொண்டு பலரையும் கடித்துக் காயப்படுத்தி வருகின்றது. இதனாலேயே அந் நாயை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-29)

## டெங்கு ஒழிப்பு புகையூட்டல்

(சாவகச்சேரி)

டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார பணிமனையினரால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் டெங்கு நுளம்புக்கு எதிரான புகையூட்டல் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. (அ-ம-29)




கட்டப்பிராய் சரஸ்வதி முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- அரியாலை செய்தியாளர்)

# 2014 ஆம் ஆண்டின் பிரதான தேர்தலுக்கு தயாராவோம்

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

வரலாற்றில் நடந்த தவறுகளை மறந்து, அரசாங்கத்தை மாற்றியமைக்கும் தேர்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக அனைவரும் கை கோர்க்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட 9 பிரதேச சபை உறுப்பினர்களை நேற்றுமுன்தினம் கட்சியில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பிரதான தேர்தலுக்கு தயாராவதே எமது முக்கிய நோக்கமாகும். பிரதான தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமானால் கட்சியினர் கீழ் மட்டத்தில் இருந்து கட்சி பணிகளை ஆரம்பிக்க வேண்டும். கட்சியின் கொள்கை, வேலைத் திட்டங்கள் தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும்.

அரசாங்கம், தேர்தலுக்காக அரச கட்டமைப்பை பயன்படுத்தி வருவதுடன், ஊடகங்களையும் அடக்கி வருகிறது. இதனால் 1977 ஆம் ஆண்டு தேர்தலை போன்று கீழ் மட்டத்தில் இருந்து பிரசாரங்களை ஆரம்பிக்க வேண்டும். அது மட்டுமல்லாது, 2014 ஆம் ஆண்டில் பிரதான தேர்தலை நடத்துவதற்கான பின்னணியை ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். கீழ் மட்டத்தில் பலமான அமைப்பு ரீதியான வலையமைப்பு இருந்தால் மட்டுமே அரசாங்கத்திற்கு இந்த அழுத்தத்தை கொடுக்க முடியும் என்றார். (அ-2)

# தகவல் தொடர்பாடல் கற்கைக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் Srilanka Computer Driving License (SLCDL) தகவல் தொடர்பாடல் சான்றிதழ் கற்கைநெறியை யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் தகைமையுடையோரிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாட சித்தியுடன் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் 2 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரி 16 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இதனடிப்படையில் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலை பேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் ஓகட்ஸ் மாதம் 5 ஆம் திகக்கு முன்னதாக மாவட்ட அலுவலகர், NAITA, இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான (DCTT) விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன அமைதியுடனான நிறைவான வாழ்க்கைக்கு வாழும் கலைப் பயிற்சி வழிசெய்யும்

■ சந்திப்பு:—எஸ்.ஆர்.கரன்


கே.கே.கணேஸ்ஜி

## பயிற்சியின் பலாபலன்கள்

- ✔ மன இறுக்கத்தில் இருந்து (Tension) விடுதலை பெறலாம்.
- ✔ இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, ஆஸ்துமா, தலைவலி முதலான நோய்களில் இருந்து விடுபட நல்ல வாய்ப்புள்ளது.
- ✔ நினைவாற்றல் அதிகரிக்க, நீடித்த இளமை, நீண்ட ஆயுள், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, மன அமைதி பெற இப் பயிற்சியைத் தொடரலாம்.
- ✔ சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கலாம்.
- ✔ கல்விப் பணியில் அதிக கவனம் செலுத்தி பிரச்சினைகளை எளிதாக தீர்த்துக் கொள்ளலாம்.
- ✔ கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஊசலாடும் மனதை நிகழ்காலத்திற்கு கொண்டு வர வழி செய்யும்.
- ✔ உச்சக்கட்ட விழிப்பு நிலையால் தெளிவான சிந்தனைகள், நூதன யுக்தி, அணுகுமுறைப் படைப்பாற்றல், உள்ளுணர்வு பெற்று சிறந்த முறையில் செயற்பட உதவும்.
- ✔ உடல், மனம், ஆன்மா, ஒருங்கிணைந்த வளர்ச்சி கண்டு தன்னை உணர்ந்து இன்புறச் செய்யும்.
- ✔ கடந்த வாழ்க்கை பாதிப்புக்களில் இருந்து விடுபடலாம்
- ✔ வாழ்க்கையில் உற்சாகமாக, ஆனந்தமாக, ஆரோக்கியமாக வாழ இப்பயிற்சி வழி வகுக்கும்.

**பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களால் உருவாக்கப்பட்ட வாழும் கலை அமைப்பு உலக மக்களின் நன்மையை மட்டும் நோக்காகக் கொண்ட வாழும் கலைப் பயிற்சியின் ஆசிரியரும் வாழும் கலை அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருமான கே.கே. கணேஸ்ஜி அவர்களுடன் யாழ். நல்லூர் கோவில் வீதியிலுள்ள சின்மயா மிஷனில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் தொகுப்பு.**

மன அழுத்தத்தை நீக்கி தனிமனித ஆற்றலை மேம்படுத்தும் உன்னதமான பயிற்சியே இந்த வாழும் கலைப்பயிற்சியாகும். பல வகைப்பட்ட சமூக, கலாசார, ஆன்மீக நிகழ்வுகளை தன்னார்வத் தொண்டர்களின் அமைப்புக்களைக் கொண்டு நடத்திவரும் வாழும் கலை அமைப்பானது கடந்த 1982ஆம் ஆண்டு முதல் வாழ்வின் எல்லாத்துறையிலும் நிறைந்துள்ள 3கோடிக்கும் அதிகமாக மக்களைச் சென்றடைந்துள்ளது.

இலாபநோக்கமற்ற கல்வி மற்றும் மனிதநேய அமைப்பாக தனிமனிதனில் தொடங்கி உலக சமுதாயம் வரை அமைதியையும் மனிதநேயத்தையும் வளர்க்க உறுதிகொண்டுள்ளது.

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களால் உருவாக்கப்பட்ட வாழும் கலைப்பயிற்சி சுதர்சனக் கிரியா என்னும் சக்திவாய்ந்த மூச்சுப் பயிற்சியும் எளிமையான யோகாசனங்கள், தியானங்கள், பிரணாயாமம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

தற்போது உலகளாவிய ரீதியில் 157 நாடுகளில் வியாபித்திருக்கும் இந்த வாழும் கலைப்பயிற்சியானது மதம், இனம், மொழி கடந்த சகல தரப்பு மக்களையும் சென்றடைய இந்த பயிற்சியின் எளிமைதான் காரணம்.

நாளொன்றுக்கு 25 நிமிடங்கள் மட்டும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டால் போதும். நமக்காக ஒரு நேரம் ஒதுக்கி எம்மைப்பற்றி நாமே ஆய்வு செய்வதற்கு வாழும் கலைப்பயிற்சி வழிசமைக்கிறது.

இந்தியாவின் தமிழகத்தில் சென்னையில் பிறந்த நான் அங்குள்ள கம்பனி ஒன்றில் மேலாளராகப் பணிபுரிந்தேன்.

இற்றைக்கு 23 ஆண்டு காலமாக வாழும் கலை அமைப்புடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றேன். இந்தக்காலப்பகுதியில் எனது உடல்நலக்குறைவுக்குக்கூட மருந்து வகைகளை நான் உட்கொள்ளவில்லை.

மனநிறைவோடு தேகாரோக்கியத்துடன் முகமலர்ச்சியுடன் ஒரு மனிதன் வாழவேண்டும். அவ்வாறு வாழும் வாழ்க்கையே உண்மையில் சிறந்தது.

இதில் முகமலர்ச்சி என்பது மிகவும் முக்கியமானது. மனதில் துன்பம் இருந்தாலோ அல்லது உடலில் உபாதைகள் இருந்தாலோ முகமலர்ச்சி என்பது ஏற்படாது.

வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தாமல் எந்தவொரு வேலையையும் நிம்மதியாகச் செய்யமுடியாது. மேலும் யார் முகத்தில் மலர்ச்சியில்லையோ அவர் என்னைப்பொறுத்தவரை நோயாளிதான்.

அமைதி, ஆனந்தம், அன்பில்லாத வாழ்க்கை வாழ்வது ஒரு வாழ்க்கையல்ல ; இவற்றையெல்லாம் மிகவும் குறுகிய காலத்திற்குள் வாழும் கலைப்பயிற்சி பெற்றுக் கொடுக்கும்.

இதுதவிர மனதை ஒருமுகப்படுத்துவதோடு சிந்தித்துச் செயலாற்றுவதற்கான பக்குவத்தை ஏற்படுத்தி அன்றாட வாழ்க்கையில் மாறுபட்ட கண்ணோட்டத்தில் பிரதிபலிப்பை ஏற்படுத்தி ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு அணிசெய்யும் பயிற்சியாக இது அமைகிறது.

விஞ்ஞானபூர்வமாக அதிக நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்கும் பயிற்சி என்பது நிரூபிக் கப்பட்டதனால் உலக சுகாதார அமையம் ஆரோக்கியத்திற்கு அணிசெய்யும் பயிற்சி என்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

சராசரியாக ஒரு மனிதன் இந்தப் பயிற்சியில் தொடர்ந்தும் தன்னை ஈடுபடுத்தி வரும்போது தான் புதிதாக பிறப்பெடுப்பது போன்ற இன்பத்தை மனதார உணர்வான்.

மதமோ, இனமோ, மொழியோ இந்தப் பயிற்சிக்கு ஒரு தடையாக இருக்கமுடியாது.

சுவாசத்திற்கு இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் என்ற வேறுபாடு கிடையாது.

மதம் என்பது வாழைப்பழத் தோலை நீக்கிய பின் உள்ளேயிருக்கும் கனிபோன்றது.

அன்பும் அமைதியும்தான் எல்லா மதங்களின் சாராம்சமாகும். அன்புதான் வாழ்க்கை. அதற்குத்தடையாக மதம் இருக்கமுடியாது.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதி மக்களுக்கு இந்தப் பயிற்சி தற்போது மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

தற்கொலை மரணங்கள் அதிகரித்துவரும் இக்காலகட்டத்தில் வாழும் கலைப்பயிற்சி மன அழுத்தத்தை நீக்க கடந்த கால வாழ்க்கைப் பாதிப்புக்களில் இருந்து விடுபட வாழ்க்கையில் உற்சாகமாக, ஆனந்தமாக ஆரோக்கியத்துடன் வாழ மிகவும் முக்கிய பங்காற்றும்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக நாட்டின் சகல பாகங்களைச் சேர்ந்த சகல இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதிப்புக்களிலிருந்து இன்னும் விடுபடமுடியாத நிலையில் மன அழுத்தத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதனால்தான் தற்கொலைசெய்து தமது உயிர்களை மாய்த்துக்கொள்கின்றனர்.

இந்த மனநிலையிலிருந்து அவர்களை விடுவிக்கவேண்டும். வாழும் கலைப்பயிற்சியூடாக அது சாத்தியப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இலங்கை அரசாங்கத்துடனும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து வாழும் கலை அமைப்பினர் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய 4 மாவட்டங்களிலும் இலவச பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்திலும் பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும்25ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் வாழும் கலை அமைப்பினரால் மாபெரும் அடிப்படைப் பயிற்சியொன்று மாலை 6 மணியளவில் அறிமுக உரையுடன் ஆரம்பிக்கவுள்ளது.

அத்தோடு பயிற்சிக்கான பதிவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 26, 27 ,28 ஆம் திகதி தொடர்ச்சியாக 3 நாட்கள் பயிற்சி வகுப்புக்கள் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபறும்.

இதன்பிரகாரம் 26, 27 ஆம் திகதிகளில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரையும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் இடம் பெறவுள்ளது. இதில் அனைவரும் பங்குகொண்டு பலன்பெறவேண்டும்.

மனித வாழ்க்கை யாரையும் துன்பப்படுத்துவதன்மூலம் முழுமையடையாது. எல்லோரிடத்திலும் அன்புடனும் மனித நேயத்துடனும் பண்புடனும் பழகவேண்டும்.

இதனைத்தான் எல்லா மதமும் போதிக்கின்றது. ஆன்றோர் களும் சான்றோர்களும் இதனையே வலியுறுத்தியுள்ளனர் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் உத்திகளை கையாளுகின்றது

## செல்வம் எம்.பி.குற்றச்சாட்டு

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் அரசாங்கம் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.**

நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து சென்ற தமிழ், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு உரிய முறையில் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பாக அவர் நேற்றையதினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் அரசாங்கம் 6 ஆயிரம் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

ஆனால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து சென்று வேறு இடங்களில் அகதிகளாக வாழ்ந்து வரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் குடும்பங்களை உரிய முறையில் அவர்களுடைய சொந்த மண்ணில் குடியேற்றம் செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளாது அசமந்த போக்குடன் செயற்பட்டு வருகின்றது.

ஆனால், சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ள பல் வேறு உத்திகளை அரசு கையாண்டு வருகின்றது.

தமது மீள்குடியேற்றங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தமது சொந்த மண்ணில் மீள் குடியேறமுடியாத நிலையில் உள்ள மக்கள் இது தொடர்பில் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களை முதலில் உரிய முறையில் அரசு மீள் குடியேற்றம் செய்யவேண்டும்.

இந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் சிங்கள குடியேற்றங்களை அரசு மேற்கொண்டால் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதி மன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, யுத்தத்தினால் பல பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்தித்த தமிழ், முஸ்லிம் மக்களை அவர்களுடைய சொந்த மண்ணில் உரிய முறையில் குடியேற்றம் செய்ய உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## ஐரோப்பிய ஒன்.தேர்தலை கண்காணிக்க வேண்டும்

### அழைக்கிறது பவ்ரல் அமைப்பு

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்குமாறு அரசாங்கத்திடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு உலகளாவிய அங்கீகாரம் உள்ளமையால் அவர்கள் கருத்துக்கு கூடிய நம்பகத்தன்மை இருக்கும்.

இதன் காரணமாகவே அவர்களை மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்குமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளோம் என பவ்ரல் அமைப்பின் தலைவர் ஜெஸிமா இஸ்மெயில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பைச் சேர்ந்த பங்களாதேஷ், நேபாளம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து தேர்தல்கள் கண்கா ணிப்பாளர்கள் 10 பேரை பவ்ரல் அழைக்கவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட் டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்களை அழைப்பதை தான் நிராகரிக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## இரட்டை குடியுரிமை சட்டமூலம் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

இரட்டைக் குடியுரிமை குறித்த உத்தேச சட்ட வரைவு, சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது தொடர்பில் உத்தேச சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தேச சட்டம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர், இந்த உத்தேச சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்தவர்கள் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் மீளவும் விண்ணப்பிக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரியின் பின்னணி குறித்து ஆராய்ந்தே எதிர்வரும் காலங்களில் இரட்டை குடியுரிமை வழங்கப்படும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ் விழா -2013 அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## கலந்துரையாடல் கருத்தரங்கு

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தினால் நடத்தப்படும் பிரதிநிதித்துவ ஜனநாயகமும் மக்கள் பங்காற்று அரசியலும் என்னும் கலந்துரையாடல் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்பாகவுள்ள செயற்றிறன் அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் கருத்தரங்கில் தொடக்கவுரையை த.நவாஸ் சங்கர் வழங்கவுள்ளதோடு கருத்துரையை சட்டத்தரணி சோ. தேவராஜா வழங்கவுள்ளார். (அ-5)

## நீதியான முறையில் மாகாண தேர்தல்

### ஜப்பான் தூதரகம் நம்பிக்கை

நீதியான முறையில் இலங்கையில் தேர்தல் நடைபெறும் என ஜப்பானிய அரசாங் கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் சுயாதீனமான முறையில் தேர்தலை நடத்த உதவிகள் வழங்கப்படும் என இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வடக்கில் தேர்தலை நடத்த ஜனாதிபதி பணிப்புரை விடுத்தமை வரவேற்கப்பட வேண்டியது என சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புகளின் ஓர் மைல்கல்லாக வடக்கு தேர்தலை கருதமுடியும் என தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் தேர்தல்களை நடத்த ஒத்துழைப்பு வழங்கவும் ஜப்பானிய அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் ஜப்பானிய அரசு இலங்கை க்கு 88667 டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தும் அரசாங்கத்தின் முனைப்புக்களுக்கு பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது. (அ-2)

## யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 26 ஆண்டுகள் நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் கடந்த 26 வருட காலப்பகுதியில் 5 ஆயிரத்து 30 நடமாடும் உபகரணங்களும் 9 ஆயிரத்து 480 செயற்கை அவயவங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு 14 ஆயிரத்து 508 செயற்கை அவயவ திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிறுவனத் தலைவர் [illegible] சமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டை நேற்று சனிக்கிழமை நிறைவு செய்துள்ளது.

யுத்தத்தினாலும் நோய் மற்றும் விபத்துக்களாலும் தத்தமது அவயவங்களை இழந்தவர்களுக்கு எவ்வாறான செயற்கை அவயவங்களை தயாரித்து போதிய பயிற்சிகளை வழங்கி அவர்களை சமூகத்துடன் இணைக்கும் பணியில் இந்நிறுவனம் தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இப் பணிகளுக்கு மேலாக பயனாளிகளாகவுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாவும் நிறுவனப் பயனாளிகள் சுய தொழில் முயற்சிக்கடனாக குறைந்த வட்டியுடன் தலா 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் முச்சக்கரவண்டிகள், நடமாட உதவும் உபகரணங்கள் போன்றவற்றையும் இந் நிறுவனம் தயாரித்து வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜெய்ப்பூர் நிறுவனம் தொடர்ந்தும் செயற்படுவதற்கு தாராள சிந்தையுடைய கொடையாளர்கள் மற்றும் மனிதநேயம் மிக்கவர்களிடமிருந்து பங்களிப்புகளை எதிர்பார்ப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தென்கிழக்காசிய பாதுகாப்பில் முக்கிய சக்தியாக

# இந்தியா

## புகழ்கிறார் அமெரிக்க துணை ஜனாதிபதி

(வோஷிங்டன்)

**தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் விடயத்தில் இந்தியா முக்கிய சக்தியாக திகழ்வதை வரவேற்பதாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் கூறியுள்ளார்.**

நேற்று இந்தியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு முதலில் இந்தியாவுக்கு வந்துள்ள அவர் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நட்புறவு குறித்து அவர் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் நூற்றாண்டுகளிலும் தொடரும் வகையில் ஒரு உறுதியான கூட்டாளியாக இந்தியா இருப்பதாக ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.


தென்கிழக்கு ஆசியாவில் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் பொருளாதார வளர்ச்சியிலும் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது.

இப்பிராந்தியத்தில் இந்தியா மேற்கொண்டு வரும் பணிகளை வரவேற்கிறோம். நிலம் மற்றும் கடல் வழிப் போக்குவரத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்த பூராட்டத்தக்க வகையிலான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. எதிர்கால பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு சில அடிப்படை விடயங்களில் தனது தேர்ந்தெடுக்கும் உரிமையை இந்தியா பயன்படுத்தி வருகிறது. இந்த விடயத்தில் நாங்கள் அந்நாட்டுடன் நேரடித் தொடர்பில் உள்ளோம்.

பாதுகாப்பு, தொலைத்தொடர்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டுக்கான உச்சவரம்பை இந்தியா உயர்த்தியுள்ளதை வரவேற்கிறோம்.

சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு, இருதரப்பு முதலீடு தொடர்பான உடன்பாடு உள்ளிட்டவை குறித்து இந்தியாவுடன் பேசி வருகிறோம். கடந்த 13 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் 5 மடங்கு அதிகரித்துள்ளது.


**இந்தியா வருகை**



ஜோ பிடென் புதுடில்லி மற்றும் மும்பையில் சில நிகழ்ச்சிகளில் இன்று கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தலைவர்களை சந்தித்து பேசவுள்ளார்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு பின்பு அமெரிக்க துணை ஜனாதிபதி ஒருவர் இந்தியாவுக்கு வருகை தருவது இதுவே முதல் தடவையாகும். இந்திய சுற்றுப்பயணம் நிறைவடைந்ததும் அவர் சிங்கப்பூர் புறப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)

## தன்வினை தன்னைச்சுடும் என்பது இதைத்தானோ?





(காபூல்)

இராணுவத்தினரை கொல்ல தயாரித்த குண்டு வெடித்ததில் தீவிரவாதியின் குடும்பத்தில் 5 குழந்தைகள் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதி தனது வீட்டில் பதுக்கி வைத்திருந்த குண்டு வெடித்து ஒரு தீவிரவாதியின் குடும்பமே பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாத கும்பலான தலிபான் இயக்கத்தின் தளபதியாக இருக்கும் அப்துல்லா ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களை கொல்லும் நோக்கத்தில் கடந்த 18 ஆம் திகதி தனது வீட்டில் இரகசியமாக வெடி குண்டுகளை தயாரித்துக் கொண்டிருந்தார்.

குண்டுகளை காய வைத்துவிட்டு அப்துல்லா வெளியே சென்றிருந்தபோது அவனது குழந்தைகள் அந்த வெடி குண்டுகளை எடுத்து பந்து போல் உருட்டி விளையாடினர். சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதனையடுத்து, ஏனைய குண்டுகளும் பயங்கர சத்தத்துடன் அடுத்தடுத்து வெடித்து சிதறின.

இந்த விபத்தில் அப்துல்லாவின் வீட்டில் இருந்த ஒரு பெண்ணும் அவனது 5 குழந்தைகளும் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

பலியான குழந்தைகள் 3 முதல் 7 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அமெரிக்கா-ரஷ்யா இடையே பிளவு வருமா?

(வோஷிங்டன்)

அமெரிக்க உளவாளிக்கு ரஷ்யா அடைக்கலம் வழங்கும் பட்சத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது ரஷ்யாவுக்கான பயணத்தை இரத்து செய்யத் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ரஷ்யா செல்ல திட்டமிட்டிருந்தார். அங்கு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள், சிரியா, ஈரான் மற்றும் ஆயுத கட்டுப்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த இருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க உளவு நிறுவனத்தின் முன்னாள் அதிகாரி எட்வர்ட் ஸ்நோடன் ரஷ்யாவின் மொஸ்கோ விமான நிலையத்தில் தங்கியுள்ளார். இவர் அமெரிக்கா, உள்நாட்டு தூதரகங்களில் உளவு பார்த்த விவகாரத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர். அவரை கைது செய்வதில் அமெரிக்கா தீவிரமாகவுள்ளது.




அவருக்கு எந்த நாடும் அடைக்கலம் வழங்கக்கூடாது என்றும் எச்சரித்துள்ளது.

ஆனால், ஸ்நோடனின் கோரிக்கையை ஏற்று அவருக்கு அடைக்கலம் தர ரஷ்யா தயாராகவுள்ளது. அது அமெரிக்காவுக்கு எரிச்சலையும், இக்கட்டான சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, ஸ்நோடனுக்கு அடைக்கலம் வழங்கும்பட்சத்தில் ரஷ்ய பயணத்தை ஒபாமா இரத்து செய்வார் என தெரிகிறது.

அதற்கான ஆலோசனையில் வெள்ளை மாளிகை ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## புகுஷிமா அணுஉலை கதிர்வீச்சு; புற்றுநோய் ஏற்படும் அபாயம்?



(டோக்கியோ)

புகுஷிமா அணுஉலை பராமரிப்பில் ஈடுபட்ட 2 ஆயிரம் ஊழியருக்கு தைரொய்டு, புற்று நோய் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டில் பூகம்பமும் அதைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. அதில் புகுஷிமாவில் உள்ள அணு உலையில் பாதிப்பு ஏற்பட்டு வெடித்து சிதறியது. இதனால் அதில் இருந்து நச்சு கதிர்வீச்சு வெளிப்பட்டது.

அது கடல், குடிநீர், பால், உணவு பொருட்களில் பரவியது. எனவே அப்பகுதியில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து வெடித்து சிதறிய புகுஷிமா அணு உலையை சீரமைக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே கதிர் வீச்சு கசிவை சீரமைக்கும் பணியும் நடைபெற்றது.

இருந்தும் நேற்று முன்தினம் 3ஆவது அணு உலையில் இருந்து வெளியான நீராவி கண்டு பிடிக்கப்பட்டு சீர்செய்யப்பட்டது.

அணுஉலை வெடித்து கதிர் வீச்சு வெளியானதில் இருந்து அதை சீரமைக்கும் பணியில் சுமார் 2 ஆயிரம் ஊழியர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். அவர்களின் உடலில் கதிர்வீச்சு தாக்கம் இருக்கும் என உறுதியாக நம்பப்படுகிறது.

எனவே, அணு உலை சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் 2 ஆயிரம் பேருக்கு தைரொய்டு புற்று நோய் ஆபத்து இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சீரமைப்பு பணியில் உள்ள ஊழியர்களின் உடலில் குறைந்தது 100 மில்லி சிவர்ட்ஸ் அளவில் கதிர்வீச்சு உள்ளது. இதனால் அவர்களுக்கு தைரொய்டு புற்று ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## கருணாநிதியின் உருவம் பொறித்த தபால் தலை

(சென்னை)

ஆஸ்திரியா 90 யூரோ மதிப்பிலான தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உருவம் பொறித்த தபால் தலையை வெளியிட்டுள்ளது.

இதனை ஆஸ்திரியா தமிழர்கள் கருணாநிதியிடம் ஒப்படைத்தனர். கருணாநிதியின் சமூக சேவையை பாராட்டி இந்த தபால்தலை வெளியிடப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## இந்தியாவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் விருப்பம்

(இஸ்லாமாபாத்)

இருநாடுகளுக்கும் இடையேயான நம்பகத்தன்மை குறைந்து வரும் நிலையில் இந்தியாவுடனான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஐசாஸ் சௌத்ரி செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறியதாவது,

இந்தியாவுடன் அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் இந்தியாவுடன் பேச்சு நடத்த முன்னாள் தூதர் ஷாரியார் கானை பிரதமர் நவாஸ் ஷெரீப் நியமித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்தியாவுக்குச் சென்ற ஷாரியார் கான், நட்புறவை பேணுவதற்கான பாகிஸ்தான் அரசின் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு வந்துள்ளார் என்றார்.

அடுத்தகட்ட பேச்சுவார்த்தையை எப்போது நடத்துவது என்பது குறித்து இருதரப்பு உயர் அதிகாரிகளும் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

எதிர்வரும் செப்டெம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் செல்லும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், அங்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபை சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆளில்லா விமானத் தாக்குதல்**

பாகிஸ்தான் பகுதியில் அமெரிக்கா நடத்தும் ஆளில்லா விமானத் தாக்குதல் குறித்து செய்தியாளர்கள் வினவியபோது, இது தொடர்பான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைமையிலான அரசின் கொள்கையை ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

சர்வதேச சட்டங்களையும், பாகிஸ்தானின் இறையாண்மையையும் பாதிக்கும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்படுகிறது என்று எங்களின் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளோம். இதுபோன்ற தாக்குதல்கள், பயங்கரவாதத்தை மேலும் வளர்த்தெடுக்கும் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என்றார் ஐசாஸ் சௌத்ரி. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆயிரம் சிகரெட்டுக்கள் பேருந்திலிருந்து மீட்டனர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த பேருந்து ஒன்றிலிருந்து மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கோல் சீல் ரக 20/ஆயிரம் சிகரெட்டுகளை கல்முனை பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி சிகரெட்டுகளை சட்டவிரோதமாக எடுத்துச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த பேருந்து வண்டியின் சாரதியையும் அவரது உதவியாளரையும் கல்முனை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கல்முனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து கடந்த 17 ஆம் திகதி அதிகாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரையிலான காலப் பகுதிக்குள் விசேட தேடுதல் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதன்போது கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த பேருந்து வண்டியை சோதனைக்குட்படுத்தினர்.

மேற்படி திடீர் சோதனையின்போது பேருந்து வண்டியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் கோல்சீல் ரக சிகரெட்டுக்களை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர். (அ-2)

# 21 தமிழக மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 21 இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்கள் கடந்த மாதம் 6 ஆம் திகதி கடற் படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் அவர்களை விசாரணை செய்த பின்னர் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் இவர்கள் மீண்டும் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் குறித்த மீனவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப்பிற்குள் உட்பிரவேசிக்கும் மீனவர்களுக்கு இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடக் கூடாது என பாண்டிச்சேரி அரசாங்கம் மாநில மீனவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. உத்தரவினை மீறிச் செயற்படுவோருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற் பரப்பிற்குள் பிரவேசிக்கும் மீனவர்களுக்கு ஐயாயிரம் இந்திய ரூபா அபராதம் விதிக்கப்படுவதுடன் சகலவிதமான மீனவ நலன்களும் இரத்துச் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையும் அதே குற்றத்தை இழைத்தால் பத்தாயிரம் இந்திய ரூபா அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாகவும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் வள்ளங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கு மற்றும் கிழக்கிற்கு புதிதாக 6 ரயில் சேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக ஆறு புகையிரத சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை புகையிரத திணைக்களம் கூறியுள்ளது. இதற்கு 400 மில்லியன் ரூபா முதலீடு தேவையாகவுள்ளது.

இந்தப் புதிய ஆறு புகையிரத சேவைகளும் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரலில் அல்லது மே மாதம் ஆரம்பிக்கலாம் என புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் பீ.ஏ.பி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

போரின் போது அழிந்த கொழும்பு-ஓமந்தை, மதவாச்சி-மடு ஆகிய இரண்டு புகையிரதச் சேவைகளும் புகையிரத பாதைகளும் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் பயண வசதியை அதிகரிக்கவும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கவும் புதிய புகையிரதச் சேவைகள் அவசியமாகின்றன என பொது முகாமையாளர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## கலட்டி ஐக்கிய ச.ச. நிலைய பௌர்ணமி தின விழா நாளை

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு சனசமூக நிலையத்தில் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழநாடு பத்திரிகையின் ஓய்வு நிலை ஊழியர் சி.சீவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்பௌர்ணமி விழாவில் நெல்லியடி பிரம்மகுமாரிகள் நிலையம் வழங்கும் ஆன்மீக சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளதுடன் சிறப்பு பொது அறிவுப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படுவதுடன் இப்போட்டிகளில் தரம் 1 முதல் தரம் 13 வரையான பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் குறித்த போட்டியும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் பௌர்ணமி தினத்தன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## மென்பந்து துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

எஸ்.ஆர்.சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் சிறந்த மென்பந்து துடுப்பாட்ட அணியை தெரிவு செய்யும் நோக்கில் நடத்தப்படும் Jaffna Hero வெற்றிக்கிண்ணத்திற்கான மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த துடுப்பாட்ட அணிகள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்பாக எஸ்.ஆர்.சந்தைப்படுத்தல் நிறுவனம், 201/2, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது 0785050447, 0773727524, 0785048915 என்ற தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)


**விற்பனைக்கு**

2 ½ மாதம் நிரம்பிய சகல தடுப்பூசிகளும் போடப்பட்ட ஜேர்மன் சப்பேட் பெண் (அல்ஷேசன்) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0776146501**

(3418)



எமது அணி -எமது பலமாகும்

கௌரவமான தொழில்வாய்ப்புக்கான அழைப்பு......

ரூ.40,000 மாதாந்த வருமானம்







**தகுதியான மருந்தாளர் (நிறைவேற்றுத் தரம்)**

QUALIFIED PHARMACISTS (Full Time / Part Time)

**பொத்துவில், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துரை, காத்தான்குடி, ஏராவூர், திருகோணமலை, மட்டக்குளி**

- தகுதியான மருந்தாளராக இலங்கை வைத்திய சபையில் (Sri Lanka Medical Council) பதிவு செய்யப்பட்டிருத்தல்.
- குறைந்தபட்சம் 02 வருட துறை அனுபவம் இருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளர் உறவுகளை மேம்படுத்தும் ஆற்றல்.
- ஆங்கில மொழி பேசும் மற்றும் எழுதும் ஆற்றல்.

**தெரிவுசெய்யப்பட்ட உங்களுக்கு**

- கவர்ச்சியான சம்பளத்துடன் விசேட கொடுப்பனவுகள்,
- வைத்திய உதவி,
- மரண சகாயநிதி,
- இரவு நேர பணிக்காக உணவு மற்றும்
- போக்குவரத்து வசதிகள் உட்பட
- நிவாரண விலையில் உணவுப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான வசதி உட்பட வேறு பல்வேறு வசதிகள்

**தெரிவு செய்யப்படும் மருந்தாளர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பேசித்தீர்மானிக்கலாம்**

நேர்முகப்பரீட்சை 2013 ஜூலை மாதம் 23 ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.1.00 மணி வரை கீழ் காணப்படும் முகவரியில் அமைந்துள்ள பிரதான காரியாலயத்தில் இடம்பெறும் அல்லது உங்கள் விண்ணப்பங்களை கீழ் காணப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். jobs@cargillsceylon.com .

மனிதவள முகாமையாளர்,
கார்கில்ஸ் (சிலோன்) பீ.எல்.சீ,
இலக்கம்.40, யோர்க் வீதி,
கொழும்பு-01
தொலைபேசி: 2427777 Ext-231

SINCE 1844

Cargills food city

(3400)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதிகளைப் பின்பற்றி நடக்கும் வழி, நீண்ட நெடும் பாதை. முன்மாதிரிகளைப் பின்பற்றிச் செல்லும் வழியோ சுருக்கமான பயன்மிக்க பாதை. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

# சமாதானத்தை விரும்பும் பௌத்தர்கள் இனவாதத்தை அனுமதிக்கமாட்டார்கள்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

இனவாதம் தூண்டப்படுவதை நாட்டில் இன ஐக்கியம் மற்றும் சமாதானத்தை விரும்பும் நேர்மையாகச் சிந்திக்கும் பௌத்த மக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள் என நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாசலில் வழமையாக நடந்து வரும் ஜும்ஆ தொழுகையை நேற்று முன்தினம் அங்கு கூடாது என ஊவா மாகாண அமைச்சரான அனுர விதாரன கமகே தடுத்து நிறுத்தியமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த அடிப்படைவாத அமைப்புகளில் ஒன்றான பொது பல சேனாவின செயலாளர் நாயகம் கலபொடஅத்தே ஞானசார தேரர், மஹியங்கனை பிரதேசத்தில் இனவாதத்தைத் தூண்டி வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை மஹியங்கனை பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்திற்குச் சென்ற மாகாண அமைச்சர், பள்ளிவாசல் ஸ்தாபக தர்மகர்த்தா சீனி முஹம்மது ஹாஜியாரின் மகன் சப்ரியிடம் பள்ளிவாசலில் தொழுகை நடத்தக் கூடாதென்றும், அதனை மூடி விடுமாறும் எச்சரித்துள்ளார்.

இதன் காரணமாக அங்கு ஜும்ஆத் தொழுகை நடைபெறவில்லை. இது முஸ்லிம்களை மனவேதனைக்கு உள்ளாக்கும் செயல்.

இதனிடையே, இந்தப் பள்ளிவாசல் தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி பிரதேச சபையில் தீவிரவாத கருத்துகளை பரப்பி வருவோர் ஒன்றுகூடி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும், அடுத்த மாதம் 2 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த அவர்கள் தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் சில இடங்களில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அவற்றை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதால் இலங்கையின் ஒரு சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் தமது சன்மார்க்க கடமைகளை இடையூறுகளும், அச்சமும் இன்றி நிம்மதியாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றார் அமைச்சர் ஹக்கீம்.(எ-11)

## மங்கல ஒலியும் அமங்கல ஒலியும் வேறுபட்ட நிகழ்வைக் குறிப்பவை

தமிழர் பண்பாடு பற்றி இவ்விடத்தில் அடிக்கடி பிரஸ்தாபிப்பதற்காக எவரும் எங்கள் மீது குறை நினைத்துவிடக்கூடாது.

எங்கள் பண்பாட்டின் பெருமையை அதன் கனதியைப் புரிந்து கொள்ளும் போதுதான் பண்பாட்டைக் கடைப்பிடித்தல் என்ற உணர்வு எங்கள் இளம் சமூகத்திடம் உருவெடுக்க முடியும்.

அவ்வகையில் எந்த விடயத்திலும் எங்கள் பண்பாடு, குறித்த விடயத்தைக் குறிப்பால் உணர்த்தி நிற்பதைக் காணமுடியும்.

குறிப்பாக எங்கள் வாழ்வில் நடக்கக்கூடிய நிகழ்வை இரண்டாகப்பிரித்துள்ளோம். அதில்ஒன்று மங்கல நிகழ்வு. மற்றையது அமங்கல நிகழ்வு.

ஒரு வீட்டில் மங்கல நிகழ்வு நடைபெறுவதை குறிப்பால் உணர்த்தும் பொருட்டு வீட்டு நுழைவாயிலில் கதலி வாழைக்குலை இரு மருங்கிலும் கட்டப்படும்.

கதலிவாழைக்குலையைக் கண்டதும் இந்த வீட்டில் மங்கலகரமான நிகழ்வு நடைபெறுகின்றது என நாம் உணரமுடியும்.

அதேபோல் ஒரு வீட்டின் வாசலில் மொந்தன் வாழைக்குலை கட்டப்பட்டு இருந்தால் அங்கு மரணச்சடங்கு நடைபெறுவது அறியப்படும்.

அதேபோல் மங்கலகரமான கிரியைகள் இடம்பெறும்போது வீட்டின் முன்பக்கத்தில் இரு மருங்கிலும் குத்துவிளக்குகளைக் கொண்ட கும்பம் வைக்கப்படும்.

அதேவீட்டில் நடக்கும் நிகழ்வு அபரக்கிரியையின் பொருட்டானதெனின் ஒற்றைக் குத்துவிளக்கும் கும்பமும் காணப்படும்.

இவையனைத்தும் நடைபெறும் நிகழ்வை மற்றவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு தமிழர் வாழ்வில் வகுக்கப்பட்ட பண்பாடுகளாகும்.

எனினும் துரதிர்ஷ்டமாக சில நல்ல நிகழ்வுகளில் ஒற்றைக் குத்துவிளக்கு வைத்து மங்கல விளக்கு ஏற்றல் நடத்துப்படுகின்றது. உண்மையில் இது மிகப்பெரிய தவறு.

நல்ல நிகழ்வுகளாயின் இரண்டு குத்துவிளக்குகள் வைக்கப்படுவதும் அவை இரண்டிலும் தீபம் ஏற்றுவதும் அவசியமானதாகும்.

இப்போது இந்த இடத்தில்பிரஸ்தாபிக்க வந்த விடயம் ஒற்றைக் குத்துவிளக்குச் சம்பந்தப்பட்டதல்ல.

மாறாக மங்கலம், அமங்கலம் என்ற இரு வேறுபட்ட வாழ்வியல் சம்பவங்களை வித்தியாசப்படுத்த; பண்பாட்டுக் கோலங்களை பயன்படுத்திய தமிழர்களாகிய நாம், மங்கல நிகழ்விலும் அமங்கல காரியங்களிலும் சீனவெடி கொளுத்தி கலகலப்பை ஏற்படுத்துவதன் தாற்பரியம் புரியவே இல்லை.

கோயில் திருவிழாக்கள், திருமண நிகழ்வுகள், தைப்பொங்கல், புத்தாண்டு, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் மற்றும் மரணச் சடங்குகள் என எந்தவித வேறுபாடுமின்றி சீனவெடி கொளுத்துவது பொருத்தமானதா? என்பதே நம் கேள்வி.

உண்மையில் ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் சீனவெடி கொளுத்துவது அவரின் இழப்பின் துயரை நலினப்படுத்துவதாக அமையும்.

இறுதி ஊர்வலத்தில் அமங்கல ஒலியும் பட்டினத்தடிகளின் உடற்கூற்று வண்ணமுமே அங்கீகரிக்கப்பட்டவை.


இதைவிடுத்து இறுதிச் சடங்கில் சீனவெடி கொளுத்தி ஆர்ப்பரிப்பது இழப்பினால் துயர்பட்ட குடும்பத்திற்கு வீண்செலவை ஏற்படுத்துவதாகும்.

இறுதி ஊர்வலத்தின்போது கொளுத்தப்படும் சீனவெடி, சூழலை மாசுபடுத்துவதும் வீதியில் பயணிப்ப வர்களை பயங்கொள்ளச் செய்வதும் தேவையற்ற முரண்பாடுகளை உருவாக்குவதுமாகவே இருகிறது.

ஆகையால் இறுதி ஊர்வலத்தின்போது சீனவெடி கொளுத்தும் கலாசாரத்தை முடிவுறுத்துவோம்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தொண்டு செய்வார்



உன் துணையன்றி யுயிர்த்துணை காணேன்
பின்னை யென்னைப் பிரியா துறைவாய்
அன்னையுந் தந்தையும் ஆசா னும்நீ
முன்னைப்பொருட்கெலாம் முன்னைப்பொருள்நீ
உடல் பொருள் ஆவி யுன்னதே இறைவா!
திடம்பெற ஞானத் தெளிவை நல்குதி
கண்ணே கருத்தே யெண்ணே எழுத்தே
விண்ணே விண்ணில் விளங்கும் மதியே
பண்ணே பண்ணிற் கனிய பரம!
எண்ணேன் இனிப்பிற தெய்வம் நாயேன்
ஏத்தி யேத்தி யிணங்கி வணங்கச்
சாற்றிய கவியை யேற்றிடுவாயே

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர் அமரர் ப.சச்சிதானந்தம் ஞாபகார்த்தமாக இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.(எ-11)

## நிறைவான சீடத்துவ வாழ்வை முன்னெடுப்போம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இயேசு பெத்தனியாவிற்கு வந்தபோது அங்கே மார்த்தா என்னும் பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து " ஆண்டவரே நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும்" என்றார்.

ஆண்டவர் அவரைப்பார்த்து "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப் பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவை

### பரமபிதா காட்டிய பாதை

யானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது " என்றார்.

இந்த மார்த்தாவும் மரியாவும் இயேசுவின் நண்பர்கள். அவர்கள் இயேசு எப்போதெல்லாம் ஓய்வெடுக்க விரும்பினாரோ அப்போதெல்லாம் அவரைத் தம்வீட்டில் வரவேற்கும் பேறுபெற்றிருந்தனர். உரிமையுடன் இயேசுவை உபசரிப்பதிலும் அவரோடு தனியே உரையாடி அவருடைய வார்த்தைகளை கேட்டு நடந்து வந்துள்ளனர்.

ஆனால் இன்று மார்த்தாவின் மனநிலையைப் பார்ப்போம். மார்த்தாவுக்கு நல்ல எண்ணம் இருந்தது. இயேசுவை நன்கு உபசரிக்கவேண்டும். அவருக்கு நன்கு பணிவிடை செய்யவேண்டும் என்ற மனநிலை. உபசரிப்பது என்பது நல்ல பண்பாடு மட்டுமல்ல ஒரு விவிலிய மதிப்புமகூட. வழிப்போக்கர்களை வரவேற்றுப் பணிவிடை செய்தவரும் உண்டு எனப் பவுல் கூறியுள்ளார். ஏழைகளை, ஒடுக்கப்பட்டோரை, சமூகத்தில் யாருக்கு அதிக மதிப்பு கொடுக்கவில்லையோ அவர்களை வரவேற்று உபசரிப்பது இறைவனுக்கே செய்யும் பணிவிடை.


எனவேதான் சின்னஞ் சிறு என் சகோதர, சகோதரிகளுக்குச் செய்யும் போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என இயேசு எடுத்துரைத்தார். அதனால் இறையாசியை நிறைவாகப் பெற்றுக்கொண்டார். மார்த்தாவும் மரியாவும் ஆண்டவர் இயேசுவைத் தங்கள் இல்லத்தில் வரவேற்று உணவு வழங்கி அவரோடு உறவாடினர். பணிவிடையோடு பாதம் அமர்ந்து உரையாடியது இயேசுவைக் கவர்ந்தது.

இங்கு அடுத்து மாதத்தர் செய்தது தான் இயேசுவின் கவனத்தை ஈர்த்தது. மார்த்தா இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த மரியா பற்றி இயேசுவிடமே உரிமையுடன் புகார் சொல்கின்றார்.

என்னைத் தனியே விட்டுவிட்டாள் என்ற குற்றச்சாட்டுடன் எனக்கு உதவி புரியும்படி சொல்லும் என்ற விண்ணப்பத்தையும் இயேசுவிடம் வைக்கிறார். இயேசு அவரது தவறான மனநிலையை அவருக்குச் சுட்டிக்காட்டுகிறார். நல்ல எண்ணம் கொண்டவர்களும் தவறு செய்யலாம் என்பதற்கு இந்த நிகழ்வு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

எனவே நாம் கவனமோடு இருப்போம். பிறரது வழிபாட்டுப் பங்கேற்பு ஆரவங்கள் பற்றி அவசரப்பட்டு தீர்ப்பிட்டு விடாமலும் குற்றம் சுமத்தாமலும் நம்மைக் காத்துக் கொள்வோம். அத்துடன் வாழ்க்கையில் நல்ல பங்கு எது என்கிற தெளிவையும் கற்றுக் கொள்வோம்.

இன்று பலர் மார்த்தாவும் மரியாவும் இரண்டு துருவங்கள் என்றும் ஒருவர் மற்றவருக்கு எதிரான நிலைக்கு உருவாகமாகக் காட்டப்படுகிறார் என்றும் விளக்கம் தருகின்றனர். மார்த்தாசெயல்முறை வாழ்வுக்கும் மரியா தியான வாழ்வுக்கும் உரு வகம் என்பார்கள்.



மார்த்தா இவ்வுலக நிலைக்கும் மரியா மறுவுலக நிலைக்கும் உருவகம் என்பார்கள். மார்த்தா யூத மரபுக்கும் மரியா கிறிஸ்தவ மரபுக்கும் உருவகம் என்பார்கள். மார்த்தா செயல்வழி மீட்பு என்பதற்கும் மரியா நம்பிக்கைவழி மீட்பு என்பதற்கும் உருவகம் என்பார்கள். இவ்வாறு மார்த்தாவையும் மரியாவையம் எதிர்த்துருவங்களாகக் காண்பது சரியல்ல. விவிலிய அறிஞர் கருத்துப்படி மார்த்தாவும் மரியாவும் இயேசுவை நாம் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளார்கள் என்கின்றனர். எனவே மரியா இயேசுவின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தார் என்றால் மரியா அந்த வார்த்தையைச் செயற்படுத்திக் கொண்டிருந்தார் எனலாம்.

மார்த்தா இயேசுவிடம் சென்று முறையிட்டார் என்பதைவிட ஒரு கோரிக்கையை அவர் முன்வைத்தார் என்பதே பொருத்தம். அந்த வேண்டுதலுக்கு இயேசு அளித்த பதில் நமக்குச் சிறந்தபாடமாக உள்ளது. இயேசுவின் சீடர்களாக வாழ அழைக்கப்பட்ட நாம் இயேசுவின் வார்த்தையைக் கேட்பதோடு நின்றுவிடாமல் அதைச் செயற்படுத்தவும் வேண்டும். செயற்பாட்டில் கவனத்தை முழுவதும் செலுத்தாமல் தொடர்ந்து வார்த்தையைக் கேட்க வேண்டும். வார்த்தைக்குச் செவிமடுத்தலும் அதைச் செயற்படுத்தலும் இணைந்து செல்லும் போது அங்கே நிறைவான சீடத்துவம் துலங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி) தலைசிறந்து விளங்கிய வீரர்களை ஆண்டுதோறும் தேர்வுசெய்து அவர்களது பெயரை 'ஹால் ஆப் பேம்' பட்டியலில் சேர்த்து கௌரவம் அளித்து வருகிறது. இதன்படி இந்த ஆண்டு அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் தெரிவுசெய்யப்பட்டார்.
இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு அவுஸ்திரேலியா -இங்கிலாந்து அணிகள் மோதிய 2 ஆம் நாள் ஆட்டத்தின்போது நடைபெற்றது. இதில் ஐ.சி.சி. பிரபலங்களுடன் ஷேன்வோர்ணின் மனைவியும் கலந்துகொண்டார்.
ஹால் ஆப் பேம் பட்டியலில் இடம்பெறும் 69ஆவது வீரர் ஷேன் வோர்ண் ஆவார். 43 வயதான வோர்ண் 2007ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெற்றார். இதுவரை 145 டெஸ்டில் விளையாடி 708 விக்கெட்டும், 194 ஒருநாள் போட்டியில் ஆடி 293 விக்கெட்டுகள் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அசாருதீன் ஆலோசனை

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டியில் மட்டும் விளையாடி வருகிறார். அவர் அடுத்து தென்னாபிரிக்க டெஸ்டில் விளையாடவுள்ள நிலையில் டெண்டுல்கரின் துடுப்பாட்ட நிலை குறித்து முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் சில ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்.

அதில், 'டெண்டுல்கர் பந்தை எதிர்கொள்கையில் தற்போதை விட சற்று நெஞ்சை நிமிர்த்தி நின்று ஆடினால் வேகப்பந்து வீச்சை எளிதில் அடித்து விளையாட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். வயது காரணமாக துடுப்பாட்ட வேகம் குறையும், அதனை டெண்டுல்கர் தனது ஆட்ட நுணுக்கத்தால் சரிசெய்து விடலாம். நிமிர்ந்து நின்று ஆடும்போது, பந்தை துல்லியமாக கணிக்க முடியும். அப்போது 'ஸ்விங்' பந்து வீச்சை அடித்து ஆட வசதியாக இருக்கும்' என்றார்.

# நியூசிலாந்து கிரி.சபை பணிப்பாளர் பதவி விலகினார்

நியூசிலாந்துக் கிரிக்கெட் சபையின் பணிப்பாளராகப் பதவி வகித்து வந்த ஜோன் புக்கனன் அப்பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

2 வருடங்கள் பணிப்பாளராக இருந்த அவர் தற்போது தனது பதவியிலிருந்து விலகுவதாக கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வெற்றிகரமான பயிற்றுவிப்பாளரான ஜோன் புக்கனன், அப்பதவியிலிருந்து விலகிய பின்னர் 8 வருடங்களுக்கு பின்னர் நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2011ஆம் ஆண்டு மே மாதம் இப்பதவியை ஏற்றிருந்த அவர், 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வரை அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், தற்போது 2 வருடங்களின் பின்னரே தனது பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார்.

குடும்ப விடயங்கள் காரணமாக அவுஸ்திரேலியாவிற்கு மீண்டும் குடியேறுவதற்கு முடிவு செய்துள்ளதாகவும், அதன் காரணமாக தனது பதவியிலிருந்து ஜோன் புக்கனன் பதவி விலகுவதற்குத் தீர்மானம் மேற்கொணடுள்ளதாக நியூசிலாந்துக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# ரோகித் சர்மா, புஜரா இருவரையும் கண்டித்தது பி.சி.சி.ஐ

இந்திய கிரிக்கெட் வீரர்கள் ரோகித் ஷர்மா, புஜாரா இருவரும் சமீபத்தில் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தனர். முத்தரப்பு தொடரில் தொடக்க ஆட்டக்காரராக ஆடிய அனுபவத்தை ரோகித் ஷர்மாவும் சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணியில் இடம் கிடைத்தது குறித்து புஜாராவு மனம் திறந்தனர்.


ஆனால், கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தை மீறி இருவரும் பேட்டி அளித்துள்ளதாக கூறிய இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) அவர்கள் இருவரையும் கண்டித்துள்ளது. இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

'தொடர் முடிந்ததும் உடனடியாக ஊடகங்களிடம் பேசக்கூடாது என்று அவர்கள் இருவரும் எச்சரிக்கப்பட்டனர். கிரிக்கெட் சபையின் ஒப்பந்த விதிமுறைகள் அவர்களுக்கு சுட்டிக்காட்டி, அதற்குட்பட்டு நடக்கும்படி கிரிக்கெட் சபை செயலாளர் சஞ்சய் பட்டேல் அறிவுறுத்தினார் என்றார்.

இந்திய கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் மொத்தம் 39 வீரர்கள் இடம் வகிக்கிறார்கள். இவர்கள், குறிப்பிட்ட ஒரு தொடர் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பும், அந்த தொடர் முடிந்து ஒரு மாதத்திற்கு பின்பும் எந்த காரணத்தை கொண்டும் ஊடகங்களிடம் பேசக் கூடாது என்று ஒப்பந்த விதியில் கூறப்பட்டுள்ளது.

ஊடகங்களிடம் பேச தடை விதிக்கும், கிரிக்கெட் சபையின் இந்த நடவடிக்கை நியாயமற்றது என்று இந்திய முன்னாள் வீரர்கள் கீர்த்தி ஆசாத், சந்து போர்டு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# தீவுகள் - பாகிஸ்தான் ஆட்டம் சமநிலையில்



மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகள் மோதிய மூன்றாவது ஒருநாள் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள பாகிஸ்தான் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற, தொடர் 1-1 என சமநிலை வகித்தது. மூன்றாவது போட்டி செயின்ட் லூசியாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டுவைன் பிராவோ, களத் தடுப்பில் ஈடுபட முடிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அகமது ஷேசாத் (17), நசிர் ஜாம்ஷெத் (20) ஜோடி ஏமாற்றியது. அடுத்து வந்த முகமது ஹபீஸ் (14) நிலைக்கவில்லை. அறிமுக வீரர் ஹாரிஸ் சோகைல் (26) பெரிய அளவில் சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் மிஸ்பா, ஒருநாள் அரங்கில் தனது 27ஆவது அரைசதம் அடித்தார். இவர் 75 ஓட்டங்கள் எடுத்தபோது, டுவைன் பிராவோ பந்தில் போல்டானார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அனுபவ வீரர் அப்ரிடி (1) ஏமாற்றினார். கடைசி நேரத்தில் உமர் அக்மல் (40), வாகாப் ரியாஸ் (19) கைகொடுக்க, பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 229 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் ஜாசன் ஹோல்டர், டுவைன் பிராவோ தலா 2 விக்கெட்டுக்களையும், கீமர் ரோச் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஜான்சன் சார்லஸ் (6), கிறிஸ் கெய்ல் (8) ஜோடி மோசமான ஆரம்பத்தைக் கொடுத்தது. அடுத்து வந்த டேரன் பிராவோ (17) ஏமாற்றினார். பின் இணைந்த சாமுவேல்ஸ், சிம்மன்ஸ் ஜோடி பொறுப்பாக ஆடியது. நான்காவது விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்த போது சாமுவேல்ஸ் (46) அரைசத வாய்ப்பை இழந்து வெளியேறினார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த சிம்மன்ஸ், ஒருநாள் போட்டியில் தனது 12ஆவது அரைசதத்தை பதிவு செய்தார். இவர் 75 ஓட்டங்கள் எடுத்தபோது, சயீத் அஜ்மல் 'சுழலில்' சிக்கினார்.

அடுத்து வந்த அணித்தலைவர் டுவைன் பிராவோ (13) பெரிய அளவில் சோபிக்கவில்லை. போலார்டு (0), டேரன் சமி (10), சுனில் நரைன் (14) ஆகியோரும் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர். மேற்கிந்தியத் தீவின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வாகாப் ரியாஸ் வீசிய 50ஆவது ஓவரின் [illegible] ஒரு ஓட்டம் [illegible] பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோல்டர், 4ஆவது பந்தில் ரன் எடுக்கவில்லை. பின், 5ஆவது பந்தை சிக்சருக்கு பறக்கவிட்டார். கடைசி பந்தில் வெற்றிக்கு 3ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஹோல்டர் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.


50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 229 ஓட்டங்களை மட்டும் மேற்கிந்தியத் தீவுகள் எடுக்க, போட்டி சமநிலையானது. ஹோல்டர் [illegible] ரோச் [illegible] ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் சார்பில் சயீத் அஜ்மல், ஜுனைடு கான் தலா 3, முகமது இர்பான் 2, வாகாப் ரியாஸ் ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதன்மூலம் தொடர் 1-1 என மீண்டும் சமநிலை வகிக்கிறது. ஆட்டநாயகன் விருதை பாகிஸ்தானின் மிஸ்பா, மேற்கிந்தியத் தீவின் சிம்மன்ஸ் ஆகியோர் பகிர்ந்து கொண்டனர்.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான நான்காவது போட்டி செயின்ட் லூசியாவில் இன்று நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி

## சங்கா அதிரடி சதம்



சங்கக்காரவின் அதிரடிச் சதத்தின் மூலம் இலங்கை அணி 180 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது.

சுற்றுலா தென்னாபிரிக்க அணியுடனான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி விளையாடுகின்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று பகலிரவு போட்டியாக இடம்பெற்ற முதல் ஆட்டத்தில்,

நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, குமார் சங்கக்காரவின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் குமார் சங்கக்கார 169 ஓட்டங்களைப் பெற்றார். மேலும் தரங்க 43, ஜயவர்த்தன 42 ஓட்டங்களைப் பெற்றனர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணி 31.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 180 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

தென்னாபிரிக்கா சார்பில் துடுப்பாட்டத்தில் எவரும் பெரிதாக பிரகாசிக்கவில்லை.

பந்துவீச்சில் இலங்கை அணியின் பெரேரா, ஹேரத் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் டில்ஷான 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக குமார் சங்கக்கார தெரிவு செய்யப்பட்டார்.

இதன்படி 5 போட்டிகள் கொண்ட தொடரில் ஒன்றுக்கு பூச்சியம் என்ற கணக்கில் இலங்கை முன்னிலையில் உள்ளது.




ஆட்ட நாயகன் குமார் சங்கக்கார

# பாடுமீன் அணி சம்பியன்

பாடும்மீன் அணியின் பின்கள வீரர் பிராங்கோவின் சாதுரியமான தடுப்பு ஆட்டம் கைகொடுக்க, சென்.மேரிஷ் அணியினை 2:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது பாடும்மீன் அணி.

அரியாலை சனசமூக நிலையம் தமது 64 ஆண்டுகள் நிறைவு விழாவினையொட்டி யாழ். மாவட்ட கால்ப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வந்தது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஷ் அணியினை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

இரண்டு வருடங்கள் தடையிலிருந்த சென்.மேரிஷ் அணி, வந்த வேகத்தில் கடந்த மாதம் குருநகர் பாடும்மீன் நடத்திய சுற்றுப் போட்டியில் சம்பயினாகியிருந்தது. அதே உற்வேகத்துடன் களமிறங்கியது.

அனுபவம் மிக்க வீரர்களின் பலத்துடன் பாடும்மீன் அணி களமிறங்கியது.

போட்டி ஆரம்பமாகியவுடன் சென்.மேரிஷ் அணியின் தாக்குதல் ஆட்டத் தொடங்கியது. இருந்தும் தாக்குதல் ஆட்டத்தினை பாடும்மீன் அணியின் பின்கள வீரர் பிராங்கோ தடுத்த வண்ணம் இருந்தார்.

இந்தநேரத்தில் பாடும்மீன் அணியின் திலீப் முதலாவது கோலினை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். முதல் பாதியாட்டத்தில் பாடும்மீன் அணி 1:0 என்று முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டம், முழுமையாக சென்.மேரிஷ் அணியின் பக்கமே இருந்தது. எனினும் அவ்வணியினால் பாடும்மீன் அணியின் பின்கள வீரர்களை உடைத்து கோலடிக்க முடியவில்லை.

போட்டியின் இறுதி நேரத்தில் சென். மேரிஷ் வீரர் ஒருவர் முரண்பாடாக நடந்து கொண்டதினால், பாடும்மீன் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு ஒன்று கிடைத்து. வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்திய பாடும்மீன் அணி மேலும் ஒரு கோல் போட்டு வெற்றியினை உறுதி செய்தது.

இறுதியில் பாடும்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பயினாகியது.

இப்போட்டியில் பாடும்மீன் அணி வீரர்கள் மூவருக்கும், சென்.மேரிஷ் அணி வீரர் ஒருவருக்கு நடுவரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ...

பாக அரசியல் கட்சிகள் மற்றும் எந்த நாடுகளுடனும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதில்லை என்பதே அரசாங்கத்தின் திட்டவட்டமான நிலைப்பாடாக இருந்து வருகிறது.

பிரிவினைவாதச் செயற்பாடுகளை வெற்றி கொள்வதற்காகவே, கூட்டமைப்பு வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என கோரி வருவது தெரிய வந்துள்ளது. (எ-11)

# பாதுகாப்புச்...

நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஜேஜே ஒடோங், எண்டபே விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

பாதுகாப்புச் செயலாளர், உகண்டா ஜனாதிபதி முஸேவேனி, படைகளின் தளபதி ஆகியோரை சந்தித்து இரண்டு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் பேச்சு நடத்த உள்ளார் என உகண்டாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் வே.கனநாதன் தெரிவித்தார். (எ-11)

# அமெரிக்க அதிகாரி மீது...

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மைக்கேல் இர்வின் அண்மையில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை அக்கட்சியின் கிளிநொச்சி செயலகத்தில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போது வட மாகாண சபைத் தேர்தல், படைத்தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுக கட்டிடங்கள், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், குடியியல் நிர்வாகத்தில் படைத்தரப்பின் தலையீடு மற்றும் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக அரசாங்கத்தின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மைக்கேல் இர்வினின் வன்னிப் பயணம் அரசாங்கத்துக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், இத்தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரி கலந்துரையாடல்களை நடத்தி இருப்பது குறித்து அரசு கவலை கொண்டுள்ளதாக அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த இவர், அங்கு வட மாகாணசபைத் தேர்தல், சிங்களக் குடியேற்றங்கள், தமிழர் பிரதேசங்களில் சிங்கள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் நியமனங்கள் மற்றும் தென் பகுதி மீனவர்களின் ஊடுருவல்கள் குறித்து கேட்டறிந்து கொண்டுள்ளார்.

அதேவேளை அரசாங்கத்தின் இந்தக் கவலை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர், உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் அந்தந்த நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்வது வழக்கமான பணியே என்றும், அதேபோன்றே அவர்கள் இலங்கையில் இந்த ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வட மாகாணசபைத் தேர்தல் சுதந்திரமாக, கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் இடம்பெறும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# விக்னேஸ்வரன் முதல...

அங்கு இயற்கையான மக்கள் தொகை இல்லை.

விடுதலைப் புலிகள் திட்டமிட்டு ஏற்படுத்திய மக்கள் தொகையே தற்போது வடக்கில் உள்ளது. எனவே, நதியான தேர்தல் நடைபெறவேணடுமாயின், சிங்கள மக்களும் வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவது கட்டாயமானது.

இலங்கை தற்போது பெரும் பேராபத்தை நோக்கி நெருங்கி வருகிறது. வடக்கில் தனி தமிழீழ நாடு உருவாக்குவதற்கான அரசியல் வழியினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏனைய பிரிவினைவாத சக்திகளுடன் இணைந்து அமைத்துக் கொண்டுள்ளது.

இதன் முக்கிய வெளிப்பாடு என்றே வடக்கு மாகாணசபை தேர்தலில், கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன தெரிவு செய்யப்பட்டதைக் கருத வேண்டும்.

ஆளுநரை நீக்க வேண்டும், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் போதுமானல்ல, ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என தற்போது கூறி வரும், விக்னேஸ்வரன் நாளை வடக்கின் முதலமைச்சரானால் என்னவாகும் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

எனவே, இந்தச் சவால்கள் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

வட மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள முக்கிய 5 அதிகாரங்களை குறைப்பதற்காக ஹெல உறுமய போராட்டங்களை முன்னெடுக்கும்.

60 வீதமான தமிழர்கள் இன்று சிங்கள மக்களுடனே வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் தனி ஈழத்தை ஆதரிப்பவர்கள் அல்ல.

வடக்கில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும், 1988-ம் ஆண்டு 35ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்தனர். இவர்களை புலிகள் அங்கிருந்து விரட்டினர் என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரா...

வரத் தொடங்கியுள்ளன.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து சம்பவ இடத்திற்கு மோப்ப நாய்கள் சகிதம் வருகைதந்த பொலிஸாரும இராணுவத்தினரும் சோதனையிட்டதுடன் இராணுவத்தினரின் பொறியியல் பிரிவும் சம்பவ இடத்திற்குவரவழைக்கப்பட்டது.

மீட்கப்பட்ட துப்பாக்கிரவைகள்யாவும் என.பி.என்.ஜீ வகையினைச் சேர்ந்தவை என இராணுவத்தினரால் இனங்காணப்பட்டது.

மீட்கப்பட்ட ரவைகள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பெருமளவான இத்துப்பாக்கிரவைகள் மீட்பினால் யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில்பதற்றநிலைகாணப்பட்டது. (எ-4,6)

தேவை

நெல்லியடியில் இயங்கும் கேபிள் ரி.விக்கு (Cable TV) வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு

0773662910

(C-4080)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815
E-mail: valampurii@yahoo.com

## கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிரி வெளிவாரிப்பட்டப்படிப்பு-MCS மாணவர்கள் சிறந்த பெறுபேறு

A+,A,2B+



S.Mathudramy

**BIT-Degree** பெறுபேறுகளில் **MCS** நிறுவன மாணவர்கள் தொடர்ந்தும் உயர்ந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றனர். உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத்தவறியோர் **FIT** கற்கை நெறி மூலமும் **MCS** நிறுவனத்தில் **BIT + Computer Engineering-USA** இல் இணைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகலாம். **A/L** 2013 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில். புலமைப்பரிசிலிற்கு **BIT<your name> type & send sms to 0772395895**

2A,B-,C+



M.Senthuran

# வடக்குத் தேர்...

இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியத் தரப்பில் எத்தகைய குழு பங்கேற்கும் என்பது தங்கியுள்ளது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமாகாண சபைத் தேர்தல் சுதந்திரமாகவும், நம்பகரமான முறையிலும் இடம்பெற்றால், பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியத் தரப்பில் உயர்மட்டக் குழு கலந்து கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

அதேவேளை, இத்தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடத்தப்படாது விட்டால் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான உயர்மட்டக் குழுவுக்குப் பதிலாக, அமைச்சர் ஒருவர் தலைமையிலான குழு அனுப்பி வைக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் இருப்பதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795) (C-4073)

## நிரந்தர வேலைவாய்ப்புகள்

வளமான வாழ்விற்கு அதி உயர் சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புகள் கொழும்பை அண்மித்த முன்னணித் தொழிற்சாலைகளான ஜாம், குளிர்பானம், PVC ஆடைத் தொழிற்சாலை, பிளாஸ்டிக், மெல்லியகூரை கோழி இறைச்சி தொழிற்சாலை போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/பொதியிடல் / லேபல் தரம்பிரித்தல் பிரிவுக்கு 18.50 வயதினர் (ஆண்/பெண்) தேவை. உணவு தங்குமிடம் சகாயவிலையில் சம்பளம் 18000/-, 25000/-, 30000/- வருகை தரும் நாளிலே வேலை வாய்புகள். **தொடர்புகளுக்கு: 0778430179, 0775561883** (C-4061)

## தேவை

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர வேலை வாய்ப்புகள், கப்பல் புனர்நிர்மாணப் பிரிவுக்கு கொழும்பு துறைமும் (தனியார்) சாதாரண ஊழியர்கள்/வெல்டிங் வெல்டிங் ஹெல்ப்பர் தேவை. 18 -50 வயதினர் சம்பளம் 18000/- 35000/- உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்புகள்

**தொடர்புகளுக்கு: 0775561883**

(C-4060)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி
ஐயர் ஒழுங்கையில்
3 பரப்புக் காணி
விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு

**0772687252**

(3429)

## STUDENT VISA, ALL COUNTRY VISIT VISA, SPONSOR வசதிகள் அரச வங்கிகளினூடாக.....

United Kingdom Border Agency ஆல் கடந்த 4ம் மாதத்திலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட புதிய சட்டதிட்டங்களிற்கு அமைவாக "வங்கி கணக்கு வசதி" (SPONSOR) ஏற்பாடுகளை குறித்த அரச வங்கிகளினூடாக ஒழுங்கு செய்துதரப்படும். (C-4083)

தொடர்புகளிற்கு: 0776421264

## யாழ். ஒடியல் கூழ் விற்பனைக்கு

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் ஒவ்வொரு, சனி, ஞாயிறு கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

**500 மி.லீற்றர் 150 ரூபா மட்டுமே!**

**சண்ஜெயா பூட் லான்ட் (கிளை)**

713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 7070, 0776777500 (C-4068)

## கஜமுகன் டென்ரல் கிளினிக்

நெல்லியடியில்

**Dr. A. செந்தில்குமரன்**

அவர்களினால்

நிரந்தரமாக பல் கட்டுதல்
நிரந்தரமான கிளிப் போடுதலும்
மற்றும் சகலவிதமான
பல் / வாய் சிகிச்சைகளும்
இடம்பெறுகின்றன.

**கஜமுகன் டென்ரல் கிளினிக்**

ம.ம. வீதி, நெல்லிடி,
T. P : 021 226 2888
(இலங்கை வங்கிக்கு அருகில்) (C-4082)

## தேவை

கட்டட நிர்மாணத் துறையில் தேர்ச்சி மிக்கவரா? அப்படியாயின் அழையுங்கள். மேசன்/கையுதவியாளர்/பெயின்டர்/டெலின்பாஸ்/ இலற்றீசன்/ பிளம்பர் தேவை. 20 - 50 வயதினர். சம்பளம் (தொழில் அடிப்படையில்) 18000/- 45000/- உணவு தங்குமிடம் வழங்கப்படும். உடன் அழையுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0775561883** (C-4068)

## Organ, Guitar புல்லாங்குழல் வகுப்புகள்

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

**கரவீணா இசை மன்றம்**

4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
**தொ.பே: 0777031293** (3419)

## சாவகச்சேரியிலும் கலட்டிச் சந்தியிலும்

# நியூ எய்சர் சப்ளையர்ஸ் இன் ஆடி மாத விலைக்கழிவு


- ✔ பல வர்ணங்களில் இறக்குமதி செய்யப்பட்ட டைல் வகைகள் 8X8 டைல், 12X8 டைல், 01X01 டைல், 16X16 டைல், 02X02 டைல்
- ✔ கொமேட் வகைகள்
- ✔ தண்ணீர் தாங்கிகள் 2000L, 1000L, 750L, 500L, 250L
- ✔ PVC பைப்புகளும் அதன் பொருத்துகளும், எலக்ரிக்கல் பொருட்கள்
- ✔ Fan வகைகள் 2800/- தொடக்கம்

அனைத்தும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள...



சாவகச்சேரியில்...


இல.325. கண்டி வீதி.
A9, சங்கத்தானை. 021 7201802. சாவகச்சேரி
(வைத்தியசாலைக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடையில்)



கலட்டிச் சந்தியில்...

இல.10, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் இடையில்)

- ✔ Transport Free
- ✔ டைல் பதிப்பவர்கள், குழாய் பொருத்துநர்கள், எலக்ரிக் வேலை செய்பவர்கள் எம்மிடம் உண்டு.
- ✔ இவ்வேலை தெரிந்தவர்களும் எம்மிடம் தொடர்பு கொண்டால் உங்கள் பிரதேச வேலைகளை உங்களிடம் கையளிப்போம்.



(C-4067)

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் DHL சேவை **திருமுருகன் கொம் நெற்**

## விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில்.

## விசேட சலுகை!

10-30 வீதம் வரையான விலைக்கழிவு!!
31.07.2013 வரை மட்டுமே



திருமுருகன் கொம் நெற் தற்பொழுது எமது பழைய இடத்தில் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.16, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

DHL EXPRESS TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6 (C-4079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.